# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 6

## ஆசிரியர் வழிகாட்டி

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

தமிழ் மொழியும் இலக்கியமும்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 6

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா.

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

அச்சுப் பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சிமையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய, அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சிமையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக, ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள், வசதி செய்து கொடுப்போர்(Facilitator) போன்றவையெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாட நூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்:**

கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

**பாட விடய ஆலோசனை:**

பேராசிரியர் கலாநிதி செ. யோகராஜா
கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு.க. இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி ரமீஸ் அப்துல்லா
தலைவர், மொழிகள் பீடம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
செல்வி. வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம்:**

திரு.மு.தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ் மொழித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி.நா.சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ் மொழித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**வளப் பங்களிப்பு:**

திருமதி. இ. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், கண்டி.
திருமதி. த. நிறைமதி
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
வவுனியா தெற்கு.
செல்வி. மாகிறித்தா வேதநாயகம்
சிரேஷ்ட ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி,
கொழும்பு - 04
திரு.ந.அருளானந்தம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம்,
மாத்தளை.
திரு.சி.கணபதிப்பிள்ளை
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், ஹற்றன்.
திரு.ந.யோகலிங்கம்
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், இரத்தினபுரி.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் பிரதான பாடங்களுள் ஒன்றான 'தமிழ் மொழியும் இலக்கியமும்" எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 06 - 11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு ஐந்து பாடவேளைகள் ஒதுக்கபபட்டுள்ளன.

06 - 11 ஆந் தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக தேர்ச்சிகளின் கீழ் 'தமிழ் மொழியும் இலக்கியமும்' பாடத்துக்கான கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'தமிழ் மொழியும் இலக்கியமும்' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இது தொடர்பாக ஆசிரியர் தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறை தேவையின்படி, இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். 'தமிழ் மொழியும் இலக்கியமும்' எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் செயன்முறைச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

**நூலாக்கக் குழு**
**தமிழ்மொழித் துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03. | கலைத்திட்டக் குழு | v |
| 04. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | vi |
| 05. | பாடத்திட்டம் | viii |
| 06. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1- 81 |

# பாடத்திட்டம்

## 1.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குக் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(Njrpa fy;tp Mizf;FO mwpf;if - 2003 jpnrk;gu;)**

## 2.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும்,

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

# கேட்டலும் பேச்சும்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 பல்வேறு நோக்கங் - களுக்கும் சந்தர்ப்பங்களுக்கு மேற்ப வினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 1.1 எழுத்துக்களின் ஒலிப்புக்கு ஏற்ப, சொற்களைச் செம்மையாக உச்சரிப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடை<br>- சொற்கள்<br>- சொற்தொடர்கள்<br>- வாக்கியங்கள் | • ஒலி வேறுபாட்டுச் சொற்றொகுதிகளை உச்சரிப்பார்.<br>- ல, ழ, ள<br>ண, ந, ன<br>ட, ர, ற<br>- நா நெகிழ் பயிற்சிகளைச் செய்வார்.<br>- நா பிறழ் பயிற்சிகளைச் செய்வார். | 02 |
| | 1.2 பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார்/ ஓதுவார். | • விழுமியக் கருத்தும், ஓசை நயமும், சொல் நயமும், பொருள் நயமும் கொண்ட,<br>- செய்யுள்கள்<br>- நாட்டார் பாடல்கள் | • பாடலை / செய்யுளை மனனஞ் செய்வார்.<br>• பாடலை / செய்யுளை ஓசையோடு ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளை உச்சரிப்புத் தெளிவுடன் சொல்லுவார் / ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளைப் பொருள் விளங்கிச் சொல்லுவார். / ஓதுவார். | 02 |
| | 1.3 கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார். | • செய்யுள்கள்<br>• சிறிய கதைகள்<br>• அறிவித்தல்கள்<br>• அறிவுறுத்தல்கள் | • கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>• விடயத்தின் சாராம்சத்தைக் கூறுவார்.<br>• பழமொழிகள், விடுகதைகள், துணுக்குகள் முதலிய வற்றைக் கிரகித்துக் கூறுவார். | 03<br>02 |
| | 1.4 செயற்றிறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். | • செய்யுள்கள்<br>• உரைநடை<br>• சிறுவருக்கான கதைப் பாடல்<br>• நாட்டார் பாடல்கள்<br>• சொற்பொழிவுகள் | • கேட்டலில் விருப்புடன் ஈடுபடுவார்.<br>• அவதானித்துக் கேட்டுக் கிரகித்துக் கூறுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 2.0 சந்தர்ப்பத் - துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார். | 2.1 தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார். | • உரையாடல்<br>• பொருத்தமான உரை நடைப் பகுதிகள் | • பல்வேறுபட்ட தகவல்களைச் சேகரிப்பார்.<br>• அவற்றினூடே வெளிப்படும் கருத்துக்களை அறிந்து கொள்வார்.<br>• விடயத் தெளிவு பெறுவார்.<br>• விடயங்களை விபரித்துக் கூறுவார்.<br>• கலந்துரையாடலின்போது பேச்சை அவதானித்து, சுயமாகத் தமது கருத்துக்களை முன்வைப்பார். | 05 |
| 3.0பல்வேறு பாத்திரங்- களை ஏற்று, அவற்றின் இயல்புகளை- யும் உணர்ச்சி களையும் வெளிப்படுத்திப் பேசுவார். | 3.1 பாத்திரங்களின் இயல்புகளுக்கு ஏற்ப, நடித்துப் பேசுவார். | • நாடகங்கள்<br>• சிறிய கதைகள்<br>• நாட்டார் பாடல்கள் | • பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக் கொணரும் வகையில்,<br>- உச்சரிப்புத் தெளிவுடன் பேசுவார்.<br>- பொருத்தமான தொனியுடன் பேசுவார்.<br>- முகபாவத்தினை வெளிக்காட்டுவார்.<br>- அங்க அசைவுகளுடன் விடயங்களை முன்வைப்பார். | 04 |
| | 3.2 பாவனை செய்து பேசுவார். | • அறிவிப்புகள்<br>• விளம்பரங்கள்<br>• சுயசரிதைக் கட்டுரைகள் | • பல்வேறுபட்ட பாத்திரங்களாகப் பாவனை செய்து பேசுவார்.<br>• ஒரே சமயத்தில் ஒருவரே பல்வேறுபட்ட பாத்திரங்களாகப் பாவனை செய்து, அவற்றின் தொனி வெளிப்படப் பேசுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 4.0 தமது எண்ணங்களை, கேட்போர் உளங் - கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார். | 4.1 ஆக்கத் திறன் வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார். | • செய்யுள்கள்<br>• சிறிய கட்டுரைகள்<br>• முடிவுறாக் கதைகள்<br>• அனுபவக் கட்டுரைகள்<br>• சம்பவ விபரிப்பு | • ஆசிரியர் கதையின் ஆரம்பத்தைக் கூற, மாணவர்கள் தமது கற்பனைக்கேற்ப, அதனைத் தொடர்ந்து கூறுவார்.<br>• பொருத்தமான மொழிநடையில் கூறுவார்.<br>• தமது சொந்த அனுபவங்களை வெளிப்படுத்திக் கூறுவார். | 02 |
| | 4.2 எடுத்துக் கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாக, பொருட் செறிவோடு பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார். | • கட்டுரைகள்<br>• சிறிய கதைகள்<br>• சிறிய மேடைப் பேச்சு | • பொருத்தமான தலைப்பினைத் தெரிவு செய்வார்.<br>• தலைப்புக்கு ஏற்ற வகையில் பேசுவார்.<br>• பேச்சுப் பொறிமுறைகளை அனுசரித்துப் பேசுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 5.0 ஆக்கபூர்வமான செயற்றிறன் உடைய வாசகராகச் செயற்படுவார். | 5.1 விடயத் தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | • செய்யுள்கள்<br>- கவிதை<br>• உரைநடைகள்<br>- கதைப் பகுதி | • வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.<br>- தெளிவாக உச்சரித்தல்<br>- எழுத்துக்களின் ஒலி பேதங்களை இனங்கண்டு வாசித்தல்<br>- தொனி பேதங்களுடன் வாசித்தல்<br>- எழுத்துக்களுக்கும் சொற்களுக்குமுரிய அழுத்தத்தைக் கொடுத்து வாசித்தல்<br>- சொற்களைப் பொருத்தமுறச் சேர்த்தும் பிரித்தும் வாசித்தல்<br>- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்தல்<br>• மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார். | 10 |
| 6.0 கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். | 6.1 மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள் | • பிரதான கருத்து, துணைக் கருத்துக்களைக் கூறுவார்.<br>• வாசித்த பகுதியைச் சொந்த மொழி நடையில் கூறுவார்.<br>• அரும்பதங்களின் பொருளை அறிந்து கூறுவார். | 03 |
| | 6.2 பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள் | • பல்வேறு தகவல்களைச் சேகரிப்பார்.<br>• நடைமுறைத் தேவைக்கேற்ற ஆக்கங்களை இனங்கண்டு, வாசிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 7.0 இரசனைக்காக காகவும் ஆக்கத் திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார். | 7.1 படைப்புக்களை வாசிப்பதனூடாக ஆக்கத் திறனை மேம்படுத்திக் கொள்வார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- கடிதங்கள்<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள் | • படைப்புக்களின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்வார்.<br>• நயந்தவற்றை எடுத்துக் கூறுவார். | 21 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 8.0 அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார். | 8.1 எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தி - யாக எழுதுவார். | • பார்த்தெழுதுதல்<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- வாக்கியங்கள்<br>- பந்திகள் | • உறுப்பமைய எழுதுவார்.<br>- திசைமுகம்<br>- வரிவடிவம்<br>- எழுத்துக்களுக்கிடையேயும் சொற்களுக்கிடையேயும் ஏற்ற இடைவெளி இருத்தல்<br>- நேர்த்தியாக எழுதுதல்<br>- ஏற்ற வேகத்துடன் எழுதுதல்<br>- நிறுத்தக் குறிகள் இடுதல் | 02 |
| | 8.2 அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார். | • சொல்வதெழுதுதல்<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- வாக்கியங்கள்<br>- பந்திகள் | • அவதானமாகக் கேட்டு எழுதுவார்.<br>- ஏற்ற வேகம்<br>- வரிவடிவம்<br>• ஒலிவேறுபாடுகளை அனுசரித்து எழுதுவார்.<br>- பிழையின்றி எழுதுதல்<br>- நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகக் கையாளுதல் | 03 |
| 9.0 வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார். | 9.1 வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். | • செய்யுள்கள் | • கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>• பிரதான கருத்தை இனங்கண்டு எழுதுவார்.<br>• துணைக் கருத்துக்களை எழுதுவார்.<br>• இவற்றை ஒழுங்காகவும் தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார். | 09 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 10.0எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார். | 10.1 வழுவின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார். | • உரைநடைகள்<br>- வாக்கியம் அமைத்தல் | • வாக்கிய இயைபுடன் எழுதுவார்.<br>- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இயைபுடன் எழுதுதல்<br>- திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபுபட வாக்கியம் எழுதுதல் | 04 |
| | 10.2கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார். | • உரைநடைகள்<br>- பந்திகள் | • பந்தி அமைக்கும் முறையினை அறிந்து கொள்வார்.<br>- தலைமைப் பொருளை எழுதுதல்<br>- துணைக் கருத்துக்களை எழுதுதல்<br>• கருத்துத் தொடர்புடன் எழுதுவார்.<br>- வாக்கிய இயைபுடன் எழுதுதல்<br>- ஒழுங்கு முறையில் எழுதுதல்<br>- நேர்த்தியாக எழுதுதல்<br>- நிறுத்தக் குறியீடுகளை இடுதல் | 02 |
| 11.0படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களை சுயமாக எழுது - வார். | 11.1 பல்வேறு ஆக்கங்களை எழுதுவார். | • செய்யுள்கள்<br>- பாடல்கள்<br>- கவிதைகள்<br>• உரைநடைகள்<br>- கட்டுரைகள்<br>- கதைகள்<br>- உரையாடல்<br>• நாடகம் | • ஆக்கங்களின் வடிவம், அமைப்பு, தலைப்பு என்பன பொருத்தமுற எழுதுவார்.<br>• அவதானிப்புகள், அனுபவங்கள், சிந்தனைகளை அனுசரித்து எழுதுவார்.<br>• தொடர்புபட எழுதுவார்.<br>• அனுபவங்கள், அவதானிப்புகள், சிந்தனைகளை வெளிப்படுத்தி, பல்வேறு ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். | 03 |
| | 11.2 நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். | • உரைநடைகள்<br>- உறவுமுறைக் கடிதம்<br>- அழைப்பிதழ்<br>- விளம்பரம் | • பொருத்தமான அமைப்போடு எழுதுவார்.<br>• விடய உள்ளடக்கத்தைத் தெளிவாகவும் நேர்த்தியாக வும் எழுதுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 12.0 சொற் - களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார் | 12.1 சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார். | • செய்யுள்கள்<br>- பாடல்கள்<br>• உரைநடைகள்<br>- கட்டுரைகள்<br>- கதைகள்<br>- நாடகங்கள் | • சொற்களை அறிந்து கொள்வார்.<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- ஒரு சொல் பல பொருள்<br>- ஒரு பொருள் பல சொல்<br>- மரபுச் சொற்கள்<br>- கலைச்சொற்கள் | 11 |
| | 12.2 சொற்றொடர்களின் பொருளையும் வகை யையும் அறிந்து செம்மையாகப் | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>• நாடகங்கள் | • சொற்றொடர்களின் இயல்பு, பொருள், வகை என்பவற்றை அறிந்து கொள்வார்.<br>- மரபுத் தொடர்கள்<br>- உவமை, உருவகம்<br>- இரட்டைக்கிளவி<br>- இணைமொழி<br>- அடுக்குத் தொடர்<br>• சொற்றொடர்களைச் செம்மையாகப் பிரயோகிப்பார். | 02 |
| 13.0 மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். | 13.1 எழுத்துக்களின் ஒலிப்பு முறையை - யும் வகை தொகை யையும் அறிந்து, பயன்படுத்துவார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- கதைகள்<br>- கட்டுரைகள்<br>• நாடகங்கள் | • எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து பிரயோகிப்பார்.<br>- குறில், நெடில்<br>- ர, ற, ட, ல, ள, ழ, ந, ண, ன<br>• எழுத்துக்களின் வகை, தொகையை அறிந்து கொள்வார்.<br>- உயிரெழுத்து<br>- மெய்யெழுத்து<br>- உயிர் மெய்யெழுத்து<br>- ஆய்த எழுத்து | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 13.2 சொற்களின் வகையை அறிந்து, அவற்றைப் பிரயோகிப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள் | • சொற்களின் வகையை அறிந்து, அவற்றைப் பிரயோகிப்பார்.<br>- பெயர்ச் சொற்கள்<br>- வினைச் சொற்கள்<br>- இணைப்பிடைச் சொற்கள்<br>- கலைச்சொற்கள் கலைகலைச் | 04 |
| | 13.3 சொற்றொடர், வாக்-கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து, அவற்றைப் பிரயோகிப்பார். | • பொருத்தமான உரை - நடைப் பகுதிகள்<br>• உரையாடல் | • சொற்றொடர், வாக்கியங்கள் என்பவற்றின் வகையை அறிந்து, அவற்றைப் பிரயோகிப்பார்.<br>• வாக்கியங்களின் இயல்பை அறிந்து கூறுவார்.<br>• வாக்கியங்களை இயைபுற எழுதுவார்.<br>- எழுவாய்<br>- பயனிலை<br>- செயப்படுபொருள்<br>- அடைமொழிகள்<br>- திணை, பால், எண், இடம், காலம்<br>• சொற்புணர்ச்சியை இனங்கண்ட எழுதுவார். | 03 |
| | 13.4 நிறுத்தக்குறிகளைப் பொருத்தமாகவும் செம்மையாகவும் பிரயோகிப்பார். | • உரையாடல்<br>• பொருத்தமான உரை- நடைப் பகுதிகள் | • நிறுத்தக் குறிகளை அறிந்து கொள்வார்.<br>- முற்றுப்புள்ளி - காற்புள்ளி<br>- வினாக்குறி - வியப்புக்குறி<br>- அடைப்புக்குறி - மேற்கோள் குறி<br>• நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார். | 02 |

# கற்றல் - கற்பித்தற்

# செயன்முறைக்குரிய வழிகாட்டல்

## முதலாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாட வேளை | பக். |
|---|---|---|---|---|---|
| 01. | 5.0 | 5.1 | சீனத்துத் தெனாலி ராமன் கதை | 03 | 02 |
| 02. | 1.0 | 1.1 | எழுத்துக்களின் ஒலிப்பு முறை | 02 | 04 |
| 03. | 5.0 | 5.1 | எலியும் சேவலும் | 03 | 06 |
| 04. | 12.0 | 12.1 | ஒத்த கருத்துச் சொற்கள் | 02 | 08 |
| 05. | 1.0 | 1.3 | உரைநடைப் பகுதி - ஏமாந்த நாய் | 03 | 10 |
| 06. | 13.0 | 13.1 | எழுத்துக்களின் வகை, தொகை | 02 | 11 |
| 07. | 2.0 | 2.1 | உரைநடைப் பகுதி - குரங்குச் சேட்டை | 02 | 13 |
| 08. | 12.0 | 12.1 | எதிர்க்கருத்துச் சொற்கள் | 02 | 15 |
| 09. | 10.0 | 10.1 | வாக்கியங்களை இயைபுற எழுதுதல் | 02 | 16 |
| 10. | 6.0 | 6.2 | தந்தை மகனுக்கு எழுதிய கடிதம் | 03 | 18 |
| 11. | 12.0 | 12.1 | பல பொருள் ஒரு சொல்; ஒரு பொருள் பல சொல் | 02 | 20 |
| 12. | 10.0 | 10.1 | வாக்கிய இயைபு | 02 | 22 |
| 13. | 2.0 | 2.1 | பறவைகள் பலவிதம் | 03 | 24 |
| 14. | 1.0 | 1.3 | பழமொழிகள் | 02 | 26 |
| 15. | 13.0 | 13.4 | நிறுத்தக் குறிகள் | 02 | 28 |

**தேர்ச்சி** 5.0 : ஆக்கபூர்வமான செயற்றிறன் உடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.1 : விடயத் தெளிவோடு, வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: சீனத்துத் தெனாலி ராமன் கதைகள்:
**தங்கம் விதைத்தால் தங்கம் விளையுமா?**

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- தரப்பட்ட விடயத்தைத் திருத்தமாக நிறுத்தக் குறிகளை அனுசரித்து தொனி வேறுபாடு, ஏற்ற வேகம் என்பவற்றுடன் வாசிப்பார்.
- கதையில் வரும் கதாபாத்திரங்கள், அவர்களின் பண்புகள் பற்றிக் கூறுவார்.
- கதையினை நாடகமாக நடித்துக் காட்டுவார்.
- கதையின் மையக்கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- கதையில் வரும் படிப்பினைகளைப் பின்பற்றி நடக்க முனைவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- 'தங்கம் விதைத்தால் தங்கம் விளையுமா?' கதையின் பண்புகள் பற்றிக் கலந்துரையாடி, பாடத்தை ஆரம்பித்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, மௌனமாகவும் உரத்தும் பாடத்தை வாசிக்கச் செய்தல்.
- குழுக்கள் வாசித்த விடயங்களை ஒழுங்குமுறையில் முன்வைக்கச் செய்தல்.
- கதையில் முன்வைக்கப்பட்டுள்ள படிப்பினைகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- கதை கூறும் படிப்பினையைக் கூறுதல்.
- பேராசை பெரும் நட்டத்தை ஏற்படுத்தும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- திருத்தமான முறையில் பாடத்தை வாசிப்பார்.
- பாடத்தின் மையக்கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- பாடத்தில் வரும் கதாபாத்திரங்களின் பண்புகளைப் பட்டியற்படுத்துவார்.
- கதை கூறும் படிப்பினைகளை எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி 1.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்**: எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிதல்

- குறில், நெடில்
- ரகர, றகர, டகர வேறுபாடுகள்
- லகர, ளகர, ழகர வேறுபாடுகள்
- நகர, னகர, ணகர வேறுபாடுகள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- ர, ற, ல, ள, ழ, ன, ண, ந எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து உச்சரிப்பார்.
- ரகர, றகர, டகர, லகர, ளகர, ழகர, னகர, ணகர, நகர எழுத்துக்களின் ஒலிப்பு முறைகளை அறிந்து பிரயோகிப்பார்.
- எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து, அவற்றைச் சரியாகப் பிரயோகிப்பார்.
- குறில், நெடில் வேறுபாடுகளை அறிந்து, சொற்களை, வாக்கியங்களில் அமைத்துக் காட்டுவார்.
- ஒலிப்பில் வேறுபடும் சொற்களை வாக்கியங்களில் வைத்து பொருள் புலப்பட எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப் பிரவேசத்தை மேற்கொள்ளல்.
- எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கும் முறையினை மாணவர்களுக்கு விளக்குதல்.
- ஒலிப்பில் வேறுபடும் எழுத்துத் தொகுதிகளைக் கொண்ட சொல்லட்டைகளை உருவாக்கி, அவற்றை மாணவர்களை வாசிக்கச் செய்தல் / உச்சரிக்கச் செய்தல்.
- அவ்வாறு உச்சரிக்கப் பயிற்சி (பின்னிணைப்பைக் கொடுத்து) பெறச் செய்தல்.
- பொருள் புலப்பட வாக்கியங்களை அமைக்கும் பயிற்சியை வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

- குறில் - குறுகிய ஓசை உடையன.

| உயிர்க்குறில் | உயிர்மெய்க் குறில் |
|---|---|
| அ, இ, உ | க, கு, கெ |

- நெடில் - நீண்டு ஒலிப்பன.

| உயிர்நெடில் | உயிர்மெய் நெடில் |
|---|---|
| ஆ, ஈ, ஏ | கா, கீ, கூ |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல்லட்டைகள்
- பயிற்சிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- ஒலிப்பு முறையைத் திருத்தமாக அறிந்து கூறுவார்.
- ஒலிப்பு முறையை உச்சரித்துப் பழகுவார்.
- குறில், நெடில் என்பவற்றுக்கான விளக்கங்களைக் கூறுவார்.
- ஒலிப்பில் வேறுபடும் சொற்களைப் பயன்படுத்தி, பொருள் புலப்பட வாக்கியங்களை அமைப்பார்.

**தேர்ச்சி 5.0** : ஆக்கபூர்வமான செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.1 : விடயத் தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்:** எலியும் சேவலும்

**பாடவேளை:** 03

**கற்றற் பேறுகள்:**

- பாடல்களைத் தெளிவாகவும் சரியான உச்சரிப்புடனும் வாசிப்பார்.
- பாடல்களிலுள்ள கடின பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- பாடல்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களில் வரும் விடயங்களோடு தொடர்புபட்ட பிற விடயங்களை அறிந்து கூறுவார்.
- பாடல்களை இசையுடன் பாடி நயப்பார்.
- இவை போன்ற பாடல்களை ஆக்கி நடிப்பார்.
- பாடல்களில் உள்ள விழுமியக் கருத்துக்களைக் கடைப்பிடிக்கும் மனப்பாங்கினைப் பெற்றுக்கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப் பிரவேசத்தைத் திட்டமிடல்.
- பாடலாசிரியர் தொடர்பாக விளக்கமளித்தல்.
- பாடல்களைத் திருத்தமாக வாசிக்கச் செய்தல்.
- ஒவ்வொரு பாடலினதும் உள்ளடக்கம், அதனோடு தொடர்புடைய பிற விடயங்கள் என்பனவற்றை எடுத்துக் கூறல்.
- பாடல்களில் அமைந்துள்ள நயங்களை எடுத்துக் கூறல்.
- பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் இசையுடன் பாடுவித்தல்.
- கடின பதங்களுக்கான பொருளை, அகராதியின் உதவியுடன் இனங்காண வழிகாட்டல்.
- பாடல்கள் ஆக்கப்பட்டுள்ள முறைமை பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- பாடலாசிரியர் - நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
- சிறுவர்க்குகந்த பல்வேறு சிறுவர் பாடல்களை இயற்றியவர்
- எலியும் சேவலும் - இப்பாடற்பகுதி நாடக வடிவில் தாய் எலி, சேய் எலி, பூனை, சேவல் என்பனவற்றின் குணப்பண்புகள், செயற்பாடுகள் சுவையாக விபரிக்கப்பட்டுள்ளன.

- வயது குறைந்தவர்களின் உள்ளக் கிளர்ச்சி, அனுபவங்களும் வயது முதிந்தவர்களின் அறிவு அனுபவம், கடைப்பிடிக்கவேண்டிய விழுமியங்களும் இப்பாடற் பகுதியில் கூறப்படுகின்றன.
- தீய செயல்களைச் செய்வோர் தம்மை வெளிப்படுத்திக் காட்டிக் கொள்ளார். வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்குதல் ஆகாது.
- களவு செய்தல் ஆகாது. பொருந்தாத காரியங்களைச் செய்பவர் துன்பம் அனுபவிப்பார் போன்ற விழுமியங்கள் கூறப்படுகின்றன.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- அகராதி
- டிமைன் தாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடல்களை உரிய உச்சரிப்போடு செம்மையாக வாசிப்பார்.
- பாடல்களை இசை நயத்துடன் பாடிக்காட்டுவார்.
- பாடல்களில் கூறப்பட்டுள்ள விடயங்களையும் அவை கூறப்பட்டுள்ள முறையை யும் எடுத்துக் கூறுவார்.
- பாடல்களோடு தொடர்புபட்ட பிற விடயங்களைக் கூறுவார்.
- பாடல்களின் கருத்தையும் அவற்றில் காணப்படும் நயத்தையும் விளக்கிக் கூறுவார்.
- இவை போன்ற பாடல்களைத் தேடிக்கொணர்ந்தும் சுயமாக ஆக்கியும் வாசித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.1** : சொற்களை அவற்றின் பொருள் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : **ஒத்த கருத்துச் சொற்கள்**

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:** :

- ஒத்த கருத்துச் சொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- சொற்களின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- சொற்களின் பொருளை அறிந்து, பொருத்தமான வகையில் தமது ஆக்கங்களில் பிரயோகிப்பார்.
- சொற்களைச் செம்மையாகப் பிரயோகிக்கும் வழிவகைகளை அறிந்து, அவற்றைப் பயன்படுத்துவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சொற்களின் பயன்பாட்டை விளக்குதல்.
- சொற்களின் பொருளை விளக்குதல்.
- ஒத்த கருத்துச் சொற்களை இனங்காணவும் அட்டவணைப்படுத்தவும் உதவுதல்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து கொள்ள உதவுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- ஒரு சொல் நின்று பொருள் தரும் இடத்தில், அச்சொல்லுக்குப் பதிலாக இன்னொரு சொல் அமைந்து அதே பொருளைத் தருமாயின், அச்சொல் ஒத்த பொருள் தரும் சொல் எனப்படும்.

  உ-ம்:

  ஆசை - விருப்பம், வேட்கை, அவா, விழைவு

  கடை - இறுதி, அந்தம், ஈறு, எல்லை, முடிவு

  துதித்தல் - ஏத்தல், பரவுதல், போற்றுதல், வணங்குதல், புகழ்தல்

  தோழன் - சிநேகிதன், நண்பன், சகா, பாங்கன்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மேலதிகமான சொற்கள்
- அட்டவணை
- டிமைன் தாள்கள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- சொற்களின் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- சொற்களின் பொருளை அறிந்து துலங்குவார்.
- ஒத்த கருத்துச் சொற்களை இனங்கண்டு, அட்டவணைப்படுத்துவார்.
- சொற்களைப் பொருத்தமான வகையில் ஆக்கங்களில் பயன்படுத்துவார்.
- தமது ஆக்கங்களை, சொற்களஞ்சிய விருத்தியுடன் முன்வைப்பார்.

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.3 : கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார்.

**விடய உள்ளடக்கம்**: உரைநடைப் பகுதி : **ஏமாந்த நாய்**

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- கேட்டுக் கிரகித்த கதை தொடர்பாகத் தமது கருத்துக்களைக் கூறுவார்.
- புதிய சொற்களை இனங்கண்டு பொருள் கூறுவார்.
- படிப்பினைகளையும் விழுமியக் கருத்துக்களையும் எடுத்துக் கூறுவார்.
- கதையில் தாம் இரசித்த பகுதியை விபரிப்பார்.
- கதையின் முடிவினை மாற்றி எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஏற்கெனவே வாசித்த இது போன்ற கதைகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, ஒருவர் கதையை வாசிக்க, மற்றவர்கள் அவற்றைக் கேட்டுக் கிரகிக்க வழிப்படுத்தல்.
- மாணவரை மௌன வாசிப்பிற்கு உட்படுத்துதல்.
- எழுமாறாக, மாணவர்களிடம் வாசித்த விடயத்தினை விளக்கும்படி கேட்டல்.
- கதை பற்றியும் கதையின் ஆசிரியர் பற்றியும் கலந்துரையாடுதல்.
- கதையில் இடம்பெறும் படிப்பினைகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- கதையின் ஆசிரியர் செ. கணேசலிங்கன் பற்றிய விபரம்.
- 'காகமும் நாயும்' பற்றிய கதையில் இடம்பெறும் சம்பவங்கள்.
- பாட்டி வடை சுட்ட கதையிலிருந்து மாறுபட்ட விதத்தில் இக்கதை எழுதப்பட்டிருத்தல்.
- காகம், நாய் என்பவற்றின் இயல்புகள், கதைகூறும் பாங்கிலும் உரையாடும் விதத்திலும் அமைக்கப்பட்டிருத்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூலில் தரப்பட்டுள்ள கதைப்பகுதி
- கதை பற்றி எழுதப்பட்ட மதிப்பீடுகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கதையைத் தமது சொந்த வசன நடையில் கூறுவார்.
- பாட்டி வடை சுட்ட (பழைய) கதையிலிருந்து, இக்கதை எவ்வாறு வேறுபடுகிறது என்பதைக் கூறுவார்.
- இரசித்த பகுதியை விபரிப்பார்.
- விழுமியக் கருத்துக்களை எடுத்துரைப்பார்.
- வேறு கதைகளைத் தேடி வாசிப்பார்.
- சுவையாகக் கதை கூறும் ஆற்றலைப் பெற்றுத் துலங்குவார்.

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.1 : எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்**: எழுத்துக்களின் வகை, தொகையை அறிதல்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- தமிழ் நெடுங்கணக்கினைப் பட்டியற்படுத்தும் திறனைப் பெறுவார்.
- எழுத்துக்களின் வகை, தொகையை இனங்காணும் ஆற்றலைப் பெறுவார்.
- எழுத்துக்களின் வகை, தொகையை அறிந்து குறிப்பிடுவார்.
- எழுத்துக்களைப் பொருத்தமுறச் செம்மையாகப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- தமிழ் நெடுங்கணக்கு அட்டவணையைக் காட்சிப்படுத்துதல்.
- பொருத்தமான பிரயோகச் செயற்பாடுகளை முன்வைத்து பாடத்தை ஆரம்பித்தல்.
- மாணவர்கள் குழு நிலையில், ஒவ்வொரு வகை எழுத்துக்களையும் இனங்காணச் செய்தல்.
- குழுநிலையில் பட்டியற்படுத்திய எழுத்துக்களின் வகையைக் குறிப்பிடச் செய்தல்.
- செயற்பாடு பற்றிக் கலந்துரையாடி, எழுத்துக்களின் வகை, தொகை பற்றி விளக்கமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

| | **எழுத்துக்களின் வகை** | | | **எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| I. | உயிரெழுத்துக்கள் | - | அ - ஔ | = 12 |
| II. | மெய்யெழுத்துக்கள் | - | க் - ன் | = 18 |
| III. | உயிர்மெய் எழுத்துக்கள் | - | க (க்+அ) - ன (ன்+அ) | = 216 |
| IV. | ஆய்த எழுத்து | - | ∴ | = 1 |
| | மொத்தம் (தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள்) | | | = 247 |

* வட / கிரந்த எழுத்துக்கள் = ஜ, ஸ, ஷ, ஹ, ஶ்ரீ

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மேற்றலை எறியி (OHP)
- சொல்லட்டைகள்
- டிமைன் தாள்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- எழுத்துக்களின் வகையை அறிந்து கூறுவார்.
- ஒவ்வொரு வகையிலும் அடங்கும் எண்ணிக்கையை எழுதுவார்.
- தமிழ் நெடுங்கணக்கு என்றால் என்ன என்பதை விளங்கி எழுதுவார்.
- தமிழ் நெடுங்கணக்கின் வகை, தொகைகளை அறிந்து பயன்படுத்துவார்.

**தேர்ச்சி 2.0** : சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.1 : தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்**: உரைப்பகுதி: குரங்குச் சேட்டை

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்து, விளங்கிக் கூறுவார்.
- சோமசுந்தரப்புலவர் பற்றி அறிந்து கூறுவார்.
- உரைப்பகுதியின் நோக்கத்தை அறிந்து கூறுவார்.
- கதையில் உள்ள விடயங்களை விளங்கி, அவை பற்றிக் கலந்துரையாடுவார்.
- கதையின் இடையில் வரும் பாடல்களை நயந்து கூறுவார்.
- கதையினூடாக வெளிப்படும் விழுமியக் கருத்துக்களை விளங்கிப் பின்பற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சோமசுந்தரப் புலவர் தொடர்பாகவும் 'இலங்கை வளம்' என்ற விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடி பாடத்தினை ஆரம்பித்தல்.
- மாணவரை மௌன வாசிப்பிற்கு உட்படுத்துதல்.
- எழுமாறாக, மாணவர்களிடம் வாசித்த விடயத்தினை விளக்கும்படி கேட்டல்.
- முழுமையாக உள்ளடக்க விடயங்கள் வெளிப்படுமாறு, வினாக்களை முன்வைத்துக் கலந்துரையாடல்.
- 'இலங்கை வளம்' என்ற நூலிலுள்ள செய்யுள்கள் இரண்டும் இக்கட்டுரையை விளக்குகின்றன என்பதனைக் கூறுதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, சம்பவங்களை விபரித்துக் கூறச் செய்தல்.
- பாடல்களை இசையோடு பாடுவித்தல்.
- அவற்றின் பொருள் பற்றி விளக்கமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

1. குரங்குச் சேட்டையாக இரு விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.
   - குரங்கு குளவிக்கூட்டைக் கலைத்தல்
   - குரங்குகள் தடியைக் காவடி போல் தோள்களில் வைத்துக் கொண்டு, துள்ளிக் குதித்தல்
2. குளவிகள் கொட்டியதால் ஏற்பட்ட நடுக்கத்தைக் குலைப்பன் காய்ச்சல் (குளிர் காய்ச்சல்) உடன் ஒப்பிட்டுள்ளமை
3. குரங்குகளின் காவடி ஆட்டம், அதற்கான வாத்தியங்கள் பற்றிய நகைச்சுவையான விபரிப்பு

**அரும்பத விளக்கம்**

| | |
|---|---|
| கடுவன் | - ஆண் குரங்கு |
| மந்தி | - பெண் குரங்கு |
| குளிர்சுரம் | - குளிர் காய்ச்சல் |
| காகளம் | - ஒருவகை வாத்தியம் |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- படங்கள்
- டிமைன் தாள்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- குரங்குச் சேட்டைகளை விபரித்துக் கூறுவார்.
- பாடலின் பொருளை விளக்குவார்.
- தரப்பட்ட கதையுடன் தொடர்புடைய வேறு கதைகளைக் கூறுவார்.
- பாடலில் வரும் நகைச்சுவைப் பகுதிகளை இரசனையுடன் வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 12.1 : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: எதிர்க் கருத்துச் சொற்கள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- எதிர்ப்பொருளை உணர்த்தும் சொற்களை இனங்கண்டு துலங்குவார்.
- எதிர்க்கருத்துச் சொற்களைப் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- தாம் பெற்ற மொழித்திறன்களை தமது ஆக்கங்களில் வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஏற்கெனவே அறிந்துள்ள எதிர்ச்சொற்களைப் பற்றி கலந்துரையாடி, பாடப்பிரவேசம் செய்தல்.
- சொற்களை வழங்கி, அவற்றில் எதிர்க்கருத்துத் தரும் சொற்களைக் கூறச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, ஒவ்வொரு குழுவினருக்கும் குழுச் செயற்பாடுகளுக்கு உரிய விடயங்களை வழங்குதல்.
- குழுக்களுக்குள் எதிர்க்கருத்துச் சொற்கள் பற்றிக் கலந்துரையாடச் செய்தல்.
- எதிர்க்கருத்துத் தரும் சொற்களைத் தேடித் தொகுக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- ஒரு சொல்லின் பொருளுக்கு எதிரான அல்லது எதிர்க்கருத்துப் பொருளைத் தரும் சொல் எதிர்ச்சொல் எனப்படும்.

  ஆதி - அந்தம் வள்ளல் - உலோபி

  ஒற்றுமை - வேற்றுமை இயற்கை - செயற்கை

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்கள்
- சொல்லட்டைகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- எதிர்க்கருத்தைத் தரும் சொற்களை இனங்கண்டு துலங்குவார்.
- எதிர்க்கருத்தைத் தரும் சொற்களைப் பட்டியற்படுத்துவார்.
- எதிர்க்கருத்துச் சொற்களைப் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- மொழித்திறனைத் தமது ஆக்கங்களில் வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி** 10.0 : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 10.1 : வழுவின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்**: வாக்கியங்களை இயைபுற எழுதுதல்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- வாக்கிய உறுப்புக்களை இனங்கண்டு கூறுவார்.
- வாக்கிய உறுப்புக்களைப் பட்டியற்படுத்துவார்.
- வாக்கியங்கள் இயைபுற அமைவதற்கு வாக்கிய உறுப்புக்களின் இன்றியமையாமை பற்றி அறிந்து கூறுவார்.
- அடைமொழி என்றால் என்ன என்பது பற்றி விளங்கிக் கூறுவார்.
- அடைமொழிகளைப் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- வாக்கியங்களை இயைபுறப் பயன்படுத்தி, தமது ஆக்கங்களை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாட அறிமுகத்தைத் திட்டமிடல்.
- குறித்த ஓர் உரைநடைப் பந்தியினைக் காட்சிப்படுத்தி, மாணவரை அவதானிக்கச் செய்தல்.
- அப்பந்தியில் காணப்படும் வாக்கியங்கள் பற்றி கலந்துரையாடி கருத்து எழுகின்ற இடம் (எழுவாய்), கருத்து முடிகின்ற இடம் (பயனிலை) தொடர்பாக விளக்குதல்.
- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்தி விளக்குதல்.
- மேலதிகமாக வாக்கியங்களை வழங்கி, குழுநிலையில் அவற்றிலுள்ள வாக்கிய உறுப்புக்களை இனங்காணச் செய்தல்
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- எழுவாய் - வாக்கியமொன்றில் கருத்து எழுகின்ற இடம்
- பயனிலை - வாக்கியமொன்றில் கருத்து முடிகின்ற இடம்
- செயப்படுபொருள் - பயனிலையை யாரை? எதை? / எவற்றை? என வினாக்களாக்கும்போது விடையாக வருவது செயப்படுபொருளாகும்.

**உ-ம்:**

பாரதியார் கவிதைகள் எழுதினார்.

இங்கு கருத்து எழும் இடம் **எழுவாய்** - பாரதியார்

இங்கு கருத்து முடியும் இடம் **பயனிலை** - எழுதினார்

பாரதியார் எவற்றை எழுதினார்? கவிதைகளை. ஆகவே, கவிதைகள் என்பது **செயப்படு பொருளாகும்.**

- அடைமொழி என்பது வாக்கிய உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் விபரித்து வருவதாகும்.

**உ-ம்:**

மகாகவி பாரதியார் இனிய பாடல்களைச் சுவைத்து எழுதினார்.
இங்கு மகாகவி, இனிய, சுவைத்து என்பன அடைமொழிகளாகும்.

எப்படியான பாரதி - மகாகவி
எப்படியான பாடல்கள் - இனிய
எவ்வாறு எழுதினார் - சுவைத்து

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- மேற்றலை எறியி (OHP)
- டிமைன் தாள்கள்
- சொல்லட்டைகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- வாக்கிய உறுப்புக்களை அறிந்து கூறுவார்.
- வாக்கியங்களை வழுவின்றி எழுதுவார்.
- அடைமொழிகளை இனங்கண்டு எழுதுவார்.
- வாக்கியங்களை இயைபுறப் பிரயோகித்து ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி 6.0** : கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: உறவுமுறைக் கடிதம் :
**தந்தை மகனுக்கு எழுதிய கடிதம்** (போசாக்குணவு)

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- உறவு முறைக் கடிதம் ஒன்றின் அமைப்பு முறையினை அறிந்து கூறுவார்.
- கடிதம் எழுதும்போது, நிறுத்தக் குறிகளை அனுசரித்து எழுத வேண்டும் எனக் கூறுவார்.
- கடிதமொன்றின் உள்ளடக்கத்தினை அமைக்கும் முறையினை வெளிப்படுத்துவார்.
- உள்ளடக்க விடயத்தினை விளக்கிக் கூறுவார்.
- சுயமாகக் கடிதம் எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- உறவுமுறைக் கடிதமொன்றின் அமைப்பு முறையினை வரிப்படம், மாதிரிக் கடிதங்கள் (OHP, பல்லூடகம், டிமைன் தாள்) ஊடாக விளக்குதல்.
- குறித்த அமைப்புகள், இப்பாடத்தினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்ட இடமளித்தல்.
- 'போசாக்கு உணவு' என்ற கடிதத்தில் கூறப்பட்ட விடயங்களை விளங்கி, வாசிக்கச் செய்தல்.
- உணவு தொடர்பான முக்கிய விடயங்களைப் பட்டியற்படுத்த வழிப்படுத்தல்.
- வெவ்வேறு வகையான கடிதங்களைச் சுயமாக எழுத வழிப்படுத்துதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

- உறவுமுறைக் கடித அமைப்பை அறிதல்
- போசாக்குணவு பற்றிய கருத்துக்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- மாதிரிக் கடிதம்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- தமது நண்பரின் சுகம் விசாரித்து, கடிதம் எழுதுவார்.
- உறவுமுறைக் கடிதம் ஒன்றுக்கான தளக்கோலத்தினை அமைத்துக் காட்டுவார்.
- போசாக்குணவு பற்றி விளங்கி எழுதுவார்.
- வெவ்வேறு வகையான கடிதங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி** 12.0 : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 12.1 : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்**:
- பல பொருள் ஒரு சொல்
- ஒரு பொருள் பலசொல்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- பல பொருள்கள் தரும் ஒரு சொல்லை இனங்காண்பார்.
- ஒரு பொருள் குறித்த பல சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- இனங்கண்ட சொற்களைப் பொருத்தமான இடங்களில் பொருத்தமான முறையில் பிரயோகிப்பார்.
- சொற்களைப் பொருத்தமான வகையில் ஆக்கங்களில் வைத்து எழுதுவார்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, ஆக்கங்களில் பயன்படுத்துவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் தெரிவு செய்தல்.
- சொல்லட்டைகளில் சொற்களையும் பொருளையும் தனித்தனியாக எழுதுதல்.
- ஒரே பொருளைத் தரும் சொற்களைக் கொண்ட அட்டைகளை ஒன்றாக்குதல்.
- பல பொருளைத் தரும் சொற்களை ஒரு கூட்டமாக்குதல்.
- ஒருவர் ஒரு சொல்லைக் கூற, ஏனையோர் அதற்குரிய பல பொருள்களை கூறுதல்.
- ஒருவர் ஒரு பொருளைக் கூற, ஏனையோர் அதற்குரிய பல சொற்களைக் கூறுதல்.
- கூறியவற்றைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுத வழிப்படுத்தல்.
- தாம் கற்ற பாடங்களிலிருந்து இவ்வாறான சொற்களை இனங்காணச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

- ஒரு பொருள் குறித்து பல சொற்கள் வழங்கி வருமாயின், அவை ஒரு பொருள் பல சொல் (பன்மொழி) எனப்படும்.

  உதாரணம்:

  - குளிர்ச்சி, சீதம், சீதளம், தண்மை, நளிர், பனி
  - சத்தம், ஒலி, ஓசை, அரவம்
  - ஆசை, விருப்பம், ஆவல், வேட்கை, அவா, வாஞ்சை

- பல பொருள் ஒரு சொல்

  ஒரு சொல்லானது பல பொருளில் வழங்கி வருமாயின், அது பல பொருள் ஒரு சொல் எனப்படும்.

  நூல் - ஆடை தைக்கும் நூல், புத்தகம், சாஸ்திரம்

  கிளை - கொப்பு, கூட்டம், சுற்றம், மூங்கில்

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல்லட்டைகள்
- பாடநூல்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- ஒரு பொருள் பல சொற்களை (பன்மொழிகளை)த் தேடித் தொகுப்பார்.
- பல பொருள் தரும் சொற்களைத் தேடித் தொகுப்பார்.
- அவற்றை இனங்கண்டு கூறுவார்.
- ஒரு பொருள் பல சொல், பல பொருள் ஒரு மொழிச் சொற்களை அறிந்து, ஆக்கங்களில் செம்மையாகப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி** 10.0 : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 10.1 : வழுவின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கிய இயைபு:
**திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபுபட வாக்கியம் அமைத்தல்.**

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- வாக்கிய இயைபு பற்றி அறிந்து கூறுவார்.
- இரு திணை, ஐம்பால், மூவிடச் சொற்களை அறிந்து பிரயோகிப்பார்.
- எண் (ஒருமை, பன்மை), காலம் பற்றிய விளக்கங்களை அறிந்து பிரயோகிப்பார்.
- இவற்றைப் பயன்படுத்துவதனூடாக, வாக்கியங்களை இயைபுற அமைத்து எழுதுவார்.
- இவற்றை அறிந்து ஆக்கங்களைப் படைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சில சொற்களைக் கரும்பலகையில் எழுதி, அவை தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
  உ-ம்: மாணவர்கள், மன்னன், செல்வி, கதிரை, காகங்கள்,
  பசு, நண்பர்கள், கல், மக்கள், மரம்
  இவற்றில் உயர்திணை, அஃறிணைச் சொற்களை இனங்காணச் செய்தல்.
- ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் சொற்களைக் கூறச் செய்தல்.
- ஒருமை, பன்மைச் சொற்களை இனங்காணச் செய்தல்.
- செயற்பாட்டுப் பத்திரம் வழங்கி, மாணவர்களை விடையெழுத வழிப்படுத்துதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை முன்வைக்கச் செய்தல், ஏனைய குழுக்களைக் கருத்துக்களைக் கூறச் செய்தல்; விரிவான விளக்கம் வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- திணை: இடம், சாதி, ஒழுக்கம் என பல பொருள் குறிக்கும். இலக்கண அளவில் சாதி என்பதே பொருந்துவதாகும்.
- உயர்திணை: உயர்வாகிய சாதி (பகுத்தறிவுள்ள மனிதர், தேவர், நரகர்)
- அஃறிணை : (அல் + திணை = அஃறிணை) (பகுத்தறிவற்ற உயிரினங்களும் உயிரற்ற பொருட்களும்)

**திணை**

| **உயர்திணை** | **அஃறிணை** |
|---|---|
| உ-ம்: மக்கள், தேவர், நரகர் | மரம், கல், பசு, பறவைகள் |

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| மகன் | மகள் | மக்கள் | பசு | பசுக்கள் |
| மாணவன் | மாணவி | மாணவர்கள் | கோழி | கோழிகள் |

**திணை**

- **உயர்திணை**
  - **ஆண்பால்**
  - **பெண்பால்**
  - **பலர்பால்**
- **அஃறிணை**
  - **ஒன்றன்பால்**
  - **பலவின்பால்**

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| மகன் | மகள் | மக்கள் | பசு | பசுக்கள் |
| மாணவன் | மாணவி | மாணவர்கள் | கோழி | கோழிகள் |
| ஆசிரியன் | ஆசிரியை | ஆசிரியர்கள் | வீடு | வீடுகள் |
| | | | மரம் | மரங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- பொருத்தமான செயற்பாட்டுப் பத்திரம்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- வாக்கிய இயைபு பற்றி அறிந்து கூறுவார்.
- வாக்கியங்களைப் பிழையின்றி இயைபுடன் எழுதுவார்.
- இருதிணை, ஐம்பால், மூவிடச் சொற்களை அறிந்து பிரயோகிப்பார்.
- ஒருமை, பன்மை, காலங்கள் பற்றிய விளக்கங்களை அறிந்து பயன்படுத்துவார்.
- வாக்கியங்களை இயைபுபட எழுதி, ஆக்கங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 2.0** : சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்**: பறவைகள் பலவிதம்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசிப்பார்.
- உரையாடல் ஒன்றின் அமைப்பினை அறிந்து கூறுவார்.
- உரையாடல் மூலமாகத் தகவல்களைச் சேகரிப்பார்.
- சேகரித்த விடயங்களை ஒழுங்குமுறையில் முன்வைப்பார்.
- உரையாடல் ஒன்றினை எழுதுவார்.
- தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் நண்பர்களுடன் உரையாடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, உரையாடல் வடிவில் (உரையாடலை) வாசிக்கச் செய்தல்.
- குறிப்புக்கள் எடுக்க வழிப்படுத்தல்.
- வாசித்ததன் அடிப்படையில் முக்கிய விடயங்களைப் பட்டியற்படுத்த விடுதல்.
- உரையாடல் ஒன்றினது அமைப்புப் பற்றி விளக்குதல்.
- தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் நண்பர்களுடன் உரையாடச் சந்தர்ப்பம் வழங்கல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- பறவைகள் பற்றிய விளக்கம்
  கால், பல், பறத்தல், பெரிய பறவை, தூரம் பறக்கும் பறவை, பறவைகளின் பண்பு
- உரையாடல் வடிவம் (அமைப்பு)

- அகராதியின் துணையுடன் பொருள் விளக்குதல்

| | |
|---|---|
| 1. வெள்ளுடுப்பு | 6. மனவிலாசம் |
| 2. ஒப்பனை | 7. பிரபஞ்சம் |
| 3. பால் குடிப்பிள்ளை | 8. ஞானி |
| 4. சிறத்தலடைந்த | 9. நாத்திகன் |
| 5. ஆதிக்கவெறி | 10. நயவஞ்சகம் |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்கள்
- மாதிரி உரையாடல்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- உரையாடலில் காணப்படும் கடின பதங்களை விளக்குவார்.
- உரையாடல் வடிவம் பற்றி அறிந்து கூறுவார்.
- பறவைகள் பற்றிய விடயங்களைத் தொகுத்துக் கூறுவார்.
- உரையாடல் ஒன்றினை எழுதிக் காட்டுவார்.
- உரையாடலை நிகழ்த்திக் காட்டுவார்.

**தேர்ச்சி** 1.0 : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.3 : கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார்.

**விடய உள்ளடக்கம்**: பழமொழிகள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:** :

- பழமொழிகளை இனங்கண்டு, அவற்றின் கருத்துக்களைக் கூறுவார்.
- விடயங்களைக் கேட்டுக் கிரகித்து, அவற்றிற்கான பழமொழிகளைக் கூறுவார்.
- கருத்துக்களை முன்வைக்கும்போது, பழமொழிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.
- பழமொழிகளைப் பயன்படுத்தி, வாக்கியங்களையும் சிறிய கதைகளையும் எழுதுவார்.
- பழமொழிகள் கூறும் படிப்பினைகளை அறிந்து துலங்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஏற்கனவே அறிந்து கொண்ட பழமொழிகளைக் கலந்துரையாடுதல்.
- மாணவர்களை குழுக்களாக்கி, பழமொழிகளின் கருத்துக்களை எழுதச் செய்தல்.
- மாணவர்களை எழுமாறாக அழைத்து, கருத்துக்களைக் கூறச் செய்தல்.
- பழமொழிகளைப் பயன்படுத்தி பொருத்தமான வாக்கியங்கள், சிறிய கதைகளை அமைக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவத்தினை வெளிப்படுத்திக் கூறும். ஆகவே தொன்று தொட்டு அனைவராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- படிப்பறிவு உள்ளவர்கள் மட்டுமன்றி, பாமரரும் பழமொழிகளைப் பொருத்தமான இடத்தில் பிரயோகிக்கின்றனர்.
- பழமொழிகளில் செந்தமிழ், பேச்சு வழக்கு என்பன காணப்படுகின்றன.

- பழமொழிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தினால் நமது பேச்சும் எழுத்தும், அழகும் சுவையும் பொருந்தியனவாகக் காணப்படும்.
- பழமொழிகள் தமக்குரிய நேர்ப்பொருளை உணர்த்தாமல், குறிப்புப் பொருள் ஒன்றினை எடுத்து விளக்கும்.

  உ-ம்:-

  "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" - ஒற்றுமையே பலம்.

  "ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு" - கோபம் கொண்டவனுக்கு அறிவு செயற்படாது.

  "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" - சிறிய உதவி செய்தவரையும் நன்றியுடன் நினைவில் கொள்ளவேண்டும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பழமொழி எழுதப்பட்ட அட்டைகள்
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பழமொழிகளை இனங்கண்டு, அவற்றின் கருத்துக்களைக் கூறுவார்.
- கருத்துக்களைக் கேட்டுக் கிரகித்து அவற்றிற்கான பழமொழிகளை இனங்கண்டு கூறுவார்.
- கருத்துக்களை முன்வைக்கும்போது பொருத்தமான பழமொழிகளைப் பிரயோகிப்பார்.
- பழமொழிகளைப் பயன்படுத்தி, சிறிய கதைகளை / ஆக்கங்களை எழுதுவார்.

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.4 : நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகவும் செம்மையாகவும் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : நிறுத்தக் குறிகள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- பொருள் நன்கு புலப்படுவதற்கு நிறுத்தக் குறிகளை உரியவாறு பயன்படுத்த வேண்டுமென்பதை அறிந்து துலங்குவார்.
- நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டை அறிந்து பிரயோகிப்பார்.
- நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி, தமது ஆக்கங்களை முன்வைப்பார்.
- நிறுத்தக் குறிகளைச் செம்மையாகக் கையாளுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- நிறுத்தக் குறிகளை அறிமுகம் செய்தல்.
- நிறுத்தக் குறிகளற்ற பந்தியொன்றை வழங்கி, நிறுத்தக் குறிகளை இடச்செய்து அவற்றின் பிரயோகத்தினை விளக்குதல்.
- குழு வேலைகளைத் திட்டமிட்டு, அவற்றினை வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

1. **முற்றுப்புள்ளி (.) / முற்றுத்தரிப்பு / முடிப்பிசைக் குறி**

முற்றுப்புள்ளி (.) / முற்றுத்தரிப்பு / முடிப்பிசைக் குறி பயன்படும் சந்தர்ப்பங்கள்.

i. கூற்று, வியங்கோள், ஏவல் வாக்கியங்களின் இறுதியில்

ii. சொற்சுருக்கத்தின் இறுதியில்

iii. கடித முகவரியின் இறுதியில்

**2. வினாக்குறி / வினாவிசைக்குறி ( ? )**

**3. வியப்புக் குறி / மெய்ப்பாட்டுக்குறி ( ! )**

i. வியப்பு / இரக்கம் / வலி போன்ற உணர்ச்சி வெளிப்பாட்டுச் சந்தர்ப்பங்களில்

ii. மறைந்து போன அல்லது முன்னிலையில் இல்லாத ஒருவரை அல்லது ஒன்றை விழித்துக் கூறும்போது

**உ-ம் :**

பாரதியே! நீ இன்று இருந்திருந்தால் ........

**4. காற் புள்ளி / கால் மாத்திரை / உறுப்பிசைக் குறி ( , )**

தொடராக வருகின்ற சொற்களையும் சொற்றொடர்களையும் துணை வாக்கியங்களையும் பொருள் விளங்கும் வண்ணம் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படும்.

**5. முக்காற்புள்ளி / விளக்கிசைக் குறி ( : )**

பிரதான கூற்றுக்குப் பின்னே வரும் கூற்று, அதன் விளக்கமாக அமையுமிடத்து இடப்படும்.

**6. மேற்கோட் குறி / அனுவாதக் குறி ( “ .............. ” )**

ஒருவருடைய கூற்றை அப்படியே எடுத்தாளும்போது மேற்கோட் குறி பயன்படும்.

**7. அரைப்புள்ளி / தொடரிசைக் குறி ( ; )**

i . ஒரே விடயம் பற்றிய தொடர்களைப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- நிறுத்தக் குறிகளற்ற பந்தியொன்று
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- நிறுத்தக் குறிகளை உரியவாறு பயன்படுத்தும் திறனைப் பெறுவார்.
- நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டை அறிந்து பிரயோகிப்பார்.
- நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி, தமது ஆக்கங்களை முன்வைப்பார்.

## இரண்டாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாட வேளை | பக். |
|---|---|---|---|---|---|
| 01. | 7.0 | 7.1 | அழ. வள்ளியப்பா பாடல்கள் | 04 | 31 |
| 02. | 12.0 | 12.1 | இரட்டைக்கிளவி, இணைமொழி, அடுக்குத் தொடர் | 03 | 34 |
| 03. | 7.0 | 7.1 | மூட ஆமை | 03 | 36 |
| 04. | 13.0 | 13.2 | பெயர்ச் சொற்கள் | 04 | 38 |
| 05. | 7.0 | 7.1 | தென்னமரக்கும்மி | 04 | 40 |
| 06. | 3.0 | 3.2 | சுயசரிதைக் கட்டுரைகள்: அறிவிப்புக்கள் | 02 | 41 |
| 07. | 7.0 | 7.1 | புதிய ஆத்திசூடி | 03 | 43 |
| 08. | 8.0 | 8.1 | வாக்கியங்கள் அமைத்தல் | 02 | 44 |
| 09. | 3.0 | 3.1 | ஓரங்க நாடகம் | 04 | 45 |
| 10. | 10.0 | 10.2 | பந்தி எழுதுதல் | 02 | 47 |
| 11. | 11.0 | 11.1 | செய்தித் தாள் | 03 | 49 |
| 12. | 12.0 | 12.1 | கலைச்சொற்கள் | 02 | 51 |
| 13. | 7.0 | 7.1 | திருக்குறள் | 04 | 52 |

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்**: அழ. வள்ளியப்பா பாடல்கள்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்:** :

- பாடல்களைத் தெளிவாகவும் சரியான உச்சரிப்புடனும் வாசிப்பார்.
- பாடல்களிலுள்ள கடின பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- பாடல்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களில் வரும் விடயங்களோடு தொடர்புபட்ட பிற விடயங்களை அறிந்து கூறுவார்.
- பாடல்களை இசையுடன் பாடி மகிழ்வார்.
- இவை போன்ற வசனங்களையும் பாடல்களையும் உருவாக்குவார்.
- பாடல்களிலுள்ள விழுமியக் கருத்துக்களைக் கடைப்பிடிக்கும் மனப்பாங்கினை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப் பிரவேசத்தைத் திட்டமிடல்.
- பாடலாசிரியர் தொடர்பாக விளக்கமளித்தல்.
- பாடல்களைத் திருத்தமாக வாசிக்கச் செய்தல் (குழுவாக).
- ஒவ்வொரு பாடலினதும் உள்ளடக்கம், அதனோடு தொடர்புடைய பிற விடயங்கள் என்பவற்றை எடுத்துக் கூறுதல்.
- பாடல்களில் அமைந்துள்ள நயங்களை எடுத்துரைத்தல்.
- பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் இசையுடன் பாடுவித்தல்.
- அகராதியின் துணையுடன், கடின பதங்களுக்கான பொருளையறிய வழிகாட்டல்.
- பாடல்கள் ஆக்கப்பட்டுள்ள முறைமை பற்றிக் கலந்துரையாடுதல்.
- விழுமியக் கருத்துக்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- ஆசிரியர் தொடர்பான விடயங்கள்
  - அழ வள்ளியப்பா (அழகப்பச் செட்டியார் வள்ளியப்பா)
  - புதுக்கோட்டை மாவட்டம், இராயவரம்
  - குழந்தை இலக்கியச் செம்மல், தமிழ்ப் பேரவைச் செம்மல் என்பன அவருக்குக் கிடைத்த பட்டங்கள்

- பாடல்கள் தொடர்பான விடயங்கள்

**1 ஆம் பாடல்**

- அணிலின் உணவு, உண்ணும் விதம்
- அணிலின் தொனி
- அணிலின் நடமாட்டம்
- அணில் பிறருக்குத் தீங்குபயவாத தன்மை கொண்டது
- அணிலின் முதுகிலுள்ள கோடுகள் தொடர்பான ஐதிகம்

**2 ஆம் பாடல்**

- எழுத்துக்களின் ஒலி வேறுபாடு - பொருள் வேறுபாடு
- சொற் பயன்பாட்டில் பிராந்திய வேறுபாடு

  தவலை - அகன்ற வாயும் உருண்ட அடிப்பகுதியும் கொண்ட உலோகப் பாத்திரம்

**3 ஆம் பாடல்**

- தா தா தா தா தா தா தா தா தா தா - பத்துத் தா உள்ளது.
  எனவே, தாபத்து - பா பத்து என அமையும்.
- தாபம் என்ற சமஸ்கிருதச் சொல்லே தமிழில் தாகம் என்று ஆனது.
- விடுகதை அமைப்பிலான பாடல். இவை போன்று வேறு பாடல்களும் உள.
  உதாரணம்:

  திதிதி ஒருத்தி
  திதிதிதிதிதி திதிதிதிதிதிதி
  மிமி மிமி செத்தாள்

**இதன் விளக்கம்:**

மூதி ஒருத்தி (திதிதி - மூன்று தி - மூதி)

அறுதி (திதிதிதிதிதி ஆறுதி - அறுதி)

எழுதி (திதிதிதிதிதிதி ஏழுதி - எழுதி)

இருமி இருமி (மிமி - இருமி)

மூதி ஒருத்தி அறுதி எழுதி இருமி இருமி செத்தாள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- டிமைன் தாள்கள்
- மேற்றலை எறியி (OHP)

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடல்களை உரிய உச்சரிப்போடு செம்மையாக வாசிப்பார்.
- பாடல்களை இசையோடு பாடிக்காட்டுவார்.
- ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள விடயங்களையும் அவை எடுத்துக் கூறப்பட்ட முறையையும் கூறுவார்.
- பாடல்களோடு தொடர்புபட்ட பிற விடயங்களைக் கூறுவார்.
- பாடல்களின் கருத்து, அவற்றிற் காணப்படும் நயம் என்பவற்றை விளக்கிக் கூறுவார்.
- இத்தகைய வேறு பாடல்களைத் தேடிக் கொணர்ந்தும் சுயமாக ஆக்கியும் வாசித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி** 12.0 : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 12.1 : சொற்றொடர்களின் இயல்பையும் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : இரட்டைக்கிளவி, இணைமொழி, அடுக்குத் தொடர்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- சொற்றொடர்களை இனங்கண்டு பெயரிடுவார்.
- சொற்றொடர்களை சந்தர்ப்பங்களுக்கேற்ப பொருத்தமாகப் பிரயோகிப்பார்.
- சொற்றொடர்களின் இயல்பையும் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.
- சொற்றொடர்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களை எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- இரட்டைக்கிளவி, இணைமொழி, அடுக்குத்தொடர் என்பன அடங்கிய அட்டையினைக் காட்சிப்படுத்தல்.
- அவற்றை வகைப்படுத்தும் விதம் பற்றி மாணவருடன் கலந்துரையாடல்.
- அவற்றை வகைப்படுத்துமாறு மாணவரை எழுமாறாக அழைத்துக் கூறுதல்.
- வகைப்படுத்தியமை பற்றிக் கலந்துரையாடல்.
- அதனூடாக ஒவ்வொன்றினையும் வரைவிலக்கணப்படுத்தி விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

- **இரட்டைக் கிளவி** - இசை பற்றியும், பண்பு பற்றியும் குறிப்புப் பற்றியும் அடிச் சொல் இரட்டித்து, முழு உருவத்தோடும் நிற்பது இரட்டைக் கிளவியாகும்.
- சேர்ந்து நின்றே பொருள் தரும். பிரித்து நின்று பொருள் தரா.

  உதாரணம்: கடகட, கசகச, வழவழ, மொறுமொறு, பரபர, கடுகடு

  ஓசை (இசை) பற்றியன - சலசல, மடமட

  பண்பு பற்றியன - சுறுசுறு, குறுகுறு

- **அடுக்குத் தொடர்:**

  - ஒரு சொல்லே அடுக்கி வருவது, பிரித்து நின்றாலும் பொருள் தரவல்லது.

  உதாரணம்: ஊரூர், கடைகடை, ஓடிஓடி, மணிமணி

- **இணைமொழி :**

| **ஓசை** | **எதிர்** | **ஒத்தசொல்** |
|---|---|---|
| அந்திசந்தி | இன்பதுன்பம் | அண்டை அயல் |
| அகடவிகடம் | உயர்வு தாழ்வு | அழிந்தொழிந்து |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல்லட்டைகள்
- டிமைன் தாள்
- அகராதி
- மேற்றலை எறியி (OHP)

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர், இணைமொழிகளை இனங்கண்டு எழுதுவார்.
- சொற்றொடர் வகைகளில் இனங்கண்டவற்றைப் பொருத்தமுற வாக்கியங்களில் வைத்து எழுதுவார்.
- சொற்றொடர்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களை எழுதுவார்.

**தேர்ச்சி** 7.0 : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 7.1 : படைப்புக்களை வாசிப்பதனூடாக ஆக்கத்திறனை மேம்படுத்திக் கொள்வார்.

**விடய உள்ளடக்கம்**: கதைப்பாடல்: மூட ஆமை

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- பாடல்களைத் தெளிவாக வாசித்துக் காட்டுவார்.
- பாடல்களில் காணப்படும் கடின பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- பாடல் கூறும் கருத்தினை / கதையினை விளங்கிக் கூறுவார்.
- பாடல்களை இசையோடு பாடிக் காட்டுவார்.
- தாமும் இவ்வாறான பாடல்களை ஆக்கமுற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்களைக் குழுக்களாக்கி, பாடல் பகுதிகளை வாசிக்கச் செய்தல்.
- பாடல் வெளிப்படுத்தும் கதையினை மாணவர்களைக் கூறச் செய்தல்.
- அவர்கள் செம்மையாகக் கூற வழிப்படுத்துல்.
- கதை வெளிப்படுத்தும் படிப்பினையை விளக்குதல்.
- பாடல்களை இசையோடு பாடச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- இயற்பெயர் - மாணிக்கம்
- தொகுப்பு - பள்ளிப்பறவைகள்

  (பள்ளிப்பறவைகள் தொகுப்பிலிருந்து தரப்பட்ட பாடல்)
- உளவும் ஒன்று கண்டன

  உளவும் - வழியும், தந்திரமும், உபாயமும்

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- மேற்றலை எறியி (OHP)
- டிமைன் தாள்கள்
- பாடநூல்
- அகராதி

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கடின பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- சொற்களைச் சந்தி பிரித்து எழுதுவார்.
- கிரகித்த விடயங்களைச் சுருக்கமாகவும் விரிவாகவும் வெளிப்படுத்துவார். (சுருக்கமான விடை, விரிவான விடை)
- சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டுவார்.
- தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்தி, புதிய படைப்புகளை எழுதுவார்.
- பாடல் கூறும் விழுமியப் பொருளையும் படிப்பினையையும் விளங்கி, அவற்றைப் பின்பற்றுவார்.

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.2 : சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: சொற்களின் வகை: **பெயர்ச்சொற்கள்**

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :


- சொற்களின் வகையை அறிந்து கூறுவார்.
- பெயர்ச் சொற்களை வகைப்படுத்திக் காட்டுவார்.
- பெயர்ச் சொற்களை வகைப்படுத்தி, அவற்றை இனங்காணுவார்.
- பெயர்ச் சொற்களுக்கான வரைவிலக்கணத்தைக் கூறுவார்.
- பெயர்ச் சொற்களைப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாட அறிமுகம் செய்தல்.
- சொற்களின் வகைகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடல்.
- எல்லா வகைப் பெயர்ச் சொற்களும் இடம்பெறும் பந்தி ஒன்றினைக் காட்சிப்படுத்தி, பெயர்ச்சொற்களின் கீழ்க் கோடிட்டு, அவை எவ்வகைப் பெயர்களெனக் குழுநிலையில் இனங்காணச் செய்தல்.
- இனங்கண்ட விடயங்களின் காரணங்கள் பற்றிக் கலந்துரையாடி, அறுவகைப் பெயர்களையும் உதாரணங்களுடன் அட்டவணைப்படுத்தச் செய்தல்.
- இவ்வகையில் மூவிடப் பெயர்களையும் அறிமுகஞ் செய்து பட்டியற்படுத்தச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- சொல் - ஓரெழுத்தால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் அமைந்து பொருள் தருவது.



அறுவகைப் பெயர்

| | | |
|---|---|---|
| பொருட் பெயர் | - | மக்கள், மரம் |
| இடப்பெயர் | - | ஊர், மேலே |
| காலப்பெயர் | - | காலை, கார்த்திகை |
| சினைப்பெயர் | - | கண், முகம் |
| குணப்பெயர் | - | அழகு, அன்பு |
| தொழிற்பெயர் | - | உடுத்தல், உறங்கல் |

மூவிடப் பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| தன்மை | ஒருமை | - | நான், யான் |
| | பன்மை | - | நாங்கள், யாங்கள் |
| முன்னிலை | ஒருமை | - | நீ |
| | பன்மை | - | நீர், நீவிர், நீங்கள் |
| படர்க்கை | ஒருமை | - | அவன், அவள் |
| | பன்மை | - | அவர்கள் |

**படர்க்கைப் பெயர்**

| ஆண்பால் பெயர் | பெண்பால் பெயர் | பலர்பால் பெயர் | ஒன்றன்பால் பெயர் | பலவின்பால் பெயர் |
|---|---|---|---|---|
| ஊரான் | இளையாள் | ஊரார் | அது | அவை |
| பாலன் | மாலா | பிறர் | மாடு | மாடுகள் |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- டிமைன் தாள்கள்
- சொல்லட்டை
- மேற்றலை எறியி (OHP)

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- சொல் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சொல்லின் வகைகளை அறிந்து கூறுவார்.
- அறுவகைப் பெயர்களைப் பட்டியற்படுத்தி, வரைவிலக்கணங் கூறுவார்.
- அறுவகைப் பெயர்களுக்கு உதாரணங்களை எழுதுவார்.
- மூவிடப் பெயர்களைப் பட்டியற்படுத்தி, உதாரணங்கள் கூறுவார்.

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசிப்பதனூடாக ஆக்கத்திறனை மேம்படுத்திக் கொள்வார்.

**விடய உள்ளடக்கம்**: தென்னைமரக் கும்மி

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- நாட்டார் இலக்கிய வகைகளில் கும்மியும் ஒருவகை என்பதை அறிந்து கூறுவார்.
- பாடல்களைத் தெளிவாகவும் சரியான உச்சரிப்புடனும் வாசிப்பார்.
- பாடல்களைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- ஒவ்வொரு பாடலையும் நயந்து வாசிப்பார்.
- பாடல்களிலுள்ள அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- பாடல்களிலுள்ள சிறப்புக்களை விளக்குவார்.
- பாடலைக் கும்மி வடிவில் ஆடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாட அறிமுகம் செய்தல்.
- நாட்டார் இலக்கிய வகைகளை விபரித்தல்.
- தென்னைமரக் கும்மி எழுதப்பட்ட காலப் பின்னணியும் சூழலும் பற்றிய விளக்கம்.
- பாடலைச் சந்தி பிரித்துக் கூறுதல்.
- பாடலின் பொருளைக் கூறுதல்.
- பாடலை இசையோடு பாடி, ஆடச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- அடிசில் - உணவு
- குவலயம் - பூமி
- மாந்தர் - மக்கள்
- கொட்டாங்கச்சி - சிரட்டை
- சீமந்தம் (வளைகாப்பு) - கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏழாம் மாதத்தில் நடத்தப்படும் சடங்கு

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- எழுதுதாள், எழுதுகருவி

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- நாட்டார் இலக்கிய வகைகளை அறிந்து கூறுவார்.
- பாடலைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- பாடலைப் பாடி, ஆடிக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.2 : பாவனை செய்து பேசுவார்.

**விடய உள்ளடக்கம்**: சுயசரிதைக் கட்டுரைகள்
அறிவிப்புக்கள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- விடயத்திற்கு ஏற்ற வகையில் ஆயத்தம் செய்து பேசுவார்.
- ஆரம்பம், தொடருரை, முடிவுரை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பேசுவார்.
- தொனி வேறுபாட்டுடன் பிறரைக் கவரும் வகையில் பேசுவார்.
- பல்வேறுபட்ட பாத்திரங்களாகப் பாவனை செய்து பேசுவார்.
- ஏனையோரது பேச்சுக்களை அவதானித்து, கருத்துக்களை முன்வைப்பார்.
- பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மனப்பாங்கை வெளிப்படுத்துவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- மாதிரி அறிவிப்பு / பாவனை செய்து, பேச்சை நிகழ்த்திக் காட்டுதல் அல்லது ஒலிப்பதிவு செய்யப்பட்ட விடயங்களைச் செவிமடுக்கச் செய்தல்.
- அறிவிப்பு / பாவனை செய்து பேசுதலின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, விடயத் தலைப்பை வழங்கி, அறிவிப்பு / சுயசரிதையைத் தயாரிக்கச் செய்தல்.
- குழு நிலையில் மாணவர் தம்மைத் தயார்ப்படுத்துவதற்கு வழிப்படுத்தல்.
- பாவனை செய்து பேசுவதற்கு இடர்ப்படும் மாணவருக்குப் பயிற்சிகளை வழங்குதல்.
- ஆயத்தப்படுத்திய விடயங்களைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் நிகழ்த்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனையோர் செயற்படுவதை அவதானித்துக் கருத்துக்கள் கூறச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

- அறிவிப்பின்போது அல்லது பாவனை செய்து பேசுதலின்போது கவனத்திற் கொள்ள வேண்டியவை:
  - நிகழ்த்த எடுத்துக் கொண்ட விடயம்
  - சபை விளிப்பு
  - விடயத்திற்கேற்ற செயற்றிறன்

- உச்சரிப்பு
- தொனி வேறுபாடு
- மெய்ப்பாடு
- மொழிப் பிரயோகம்
- நிலை
- சபையோரைக் கவரும் விதம்
- நேரக் கட்டுப்பாடு

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- ஒலிப்பதிவு நாடா
- மாதிரிப் பேச்சுகள் அடங்கிய புத்தகம்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- குறிப்பிட்ட தலைப்பிற்கேற்ப பாவனை செய்து பேசுவார்.
- பொருத்தமான மொழிநடை, சொற்றொடர்களைக் கையாண்டு பேசுவார்.
- அறிவிப்பின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைப் பின்பற்றிப் பேசுவார்.
- தொனி வேறுபாட்டுடன் பிறரைக் கவரும்வகையில் பேசுவார்.
- ஏனையோரது பேச்சுக்களை மதிப்பிட்டு, கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 7.1 : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்**: புதிய ஆத்திசூடி

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**:

- பாடலாசிரியர் பற்றி எடுத்துக் கூறுவார்.
- பாடல்களைச் செம்மையாக வாசிப்பார்.
- பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்களையும் விழுமியங் - களையும் விளங்கிக் கூறுவார்.
- விழுமியக் கருத்துக்களையும் படிப்பினைகளையும் கடைப்பிடிப்பார்.
- பாடல்களை ஓசையோடு பாடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப்பிரவேச முறைகளைத் திட்டமிடல்.
- பாரதியாரைப் பற்றிய குறிப்புக்களைக் கூறல்.
- மாணவரைக் குழுக்களாக்கி, குறிப்பிட்ட பாடல்களை வாசித்த பின்னர் அவை பற்றி விளக்கும்படி கூறுதல்.
- பாடல் வரிகளில் கூறப்படும் விழுமியக் கருத்துக்களையும் படிப்பினை களையும் கலந்துரையாடுதல்.
- குறிப்பிட்ட பாடல்களைப் பாடவும் அவற்றின் கருத்துக்களை வாசிக்கவும் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- நவீன கருத்துக்களை கொண்டு நல் விழுமியங்களையும் படிப்பினைகளையும் வலியுறுத்தி மகாகவி பாரதியார் இயற்றியதே புதிய ஆத்திசூடியாகும்.
- இப்பாடல்களில் மனிதகுலம் உய்யும் வண்ணம் பல புதிய கருத்துக்களை பாரதியார் கூறியுள்ளார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடப் பகுதி
- அகராதி
- எழுது தாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடல்களைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைக் கூறுவார்.
- பாடல் ஆசிரியரின் நோக்கை விளக்குவார்.
- பாடலைப் பொருளுணர்ந்து ஓதுவார்.
- இது போன்ற பாடல்களை நயக்கும் திறனைப் பெறுவார்.

**தேர்ச்சி 8.0** : அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தற் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தியாக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கியங்கள் அமைத்தல்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- சொற்கள் சொற்றொடர்களைப் பற்றிய விளக்கங்களை அறிந்து கூறுவார்.
- தரப்படும் சொற்கள், சொற்றொடர்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைப்பார்.
- வாக்கியங்கள் எழுதும் போது எழுத்துக்களுக்கிடையே ஏற்ற இடைவெளியிட்டு, நிறுத்தக் குறிகளுடன் நேர்த்தியாக எழுதுவார்.
- எழுத்துப் பிழை, இலக்கணப் பிழையின்றி ஆக்கங்களை எழுதுவார்.

**பாடத்தை திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் திட்டமிடல்.
- சொற்கள், சொற்றொடர்கள், மரபுச்சொற்கள் என்பன தொடர்பான விளக்கங்களை மாணவர்களைச் செவிமடுக்கச் செய்தல்.
- மாணவர்களுக்குத் தேவையான இடத்தில் விளக்கங்களை வழங்குதல்.
- சொற்கள் சொற்றொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

**சொற்கள்** : ஒன்றின் குறியீடாக, பெயராக, வினையாக, உரியாக, இடையாக அமைவது.

**சொற்றொடர்** : கருத்துமுற்றுப்பெறாமல் நிற்கும் சொற்கூட்டம்.

**வாக்கியங்கள்**: கருத்து முற்றுப்பெற நிற்கும் சொற்கூட்டம்.

**மரபுச்சொற்கள்**: இந்தப் பொருளை இச்சொல்லால் அழைப்பது என்ற வரன்முறைக்குள் வருவன.

**மரபுத்தொடர்** : நேர்ப்பொருளை உணர்த்தாமல் குறிப்புப் பொருளை உணர்த்தும் தொடர்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- பயிற்சிகள்
- அகராதிகள்
- ஒலிப்பதிவு நாடாக்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- சொற்கள், சொற்றொடர்கள் பற்றிய விளக்கங்களை அறிந்து துலங்குவார்.
- தரப்படும் சொற்கள், சொற்றொடர்களைக் கொண்டு, வாக்கியங்கள் எழுதுவார்.
- வாக்கியங்கள் எழுதும்போது எழுத்துக்களிடையே ஏற்ற இடைவெளி விட்டு, நேர்த்தியுடன் எழுதுவார்.
- இலக்கண வழுவின்றியும் நிறுத்தக் குறிகள் இட்டும் எழுதுவார்.

**தேர்ச்சி** 3.0 : பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.1 : பாத்திரங்களின் இயல்புகளுக்கு ஏற்ப நடித்துப் பேசுவார்.

**விடய உள்ளடக்கம்**: ஓரங்க நாடகம் - கண்ணகி வழக்குரைத்தல்

**பாடவேளை** : 04

**கற்றல் பேறுகள்:**

- கதைக்குப் பொருத்தமான தொனியினைப் பிரயோகிக்கும் ஆற்றல் பெறுவார்.
- பொருத்தமான மெய்ப்பாடு பேணுந்திறனை வெளிப்படுத்துவார்.
- பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில் உச்சரிப்புத் தெளிவுடன் பேசுவார்.
- குழு ஒருமைப்பாட்டினைப் பேணுந்திறனை வளர்த்துக் கொள்ளுவார்.
- விழுமியக் கருத்துக்களையும் படிப்பினைகளையும் எடுத்துக் கூறுவார்.
- கதை முன்னிகழ்வுகளை அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கதைச் சுருக்கத்தைக் கூறி, பாடத்தை ஆரம்பித்தல்.
- கடின பதங்களுக்கு விளக்கம் கூறுதல்.
- குழுநிலையில் மாணவர்களை வாசிக்கவிடுதல்.
- மாணவர்களைப் பாத்திரமேற்று நடிக்கச் செய்தல்.
- குறை, நிறைகளைச் சுட்டிக்காட்டி, சிறப்பாகச் செய்வதற்கு வழிகாட்டலும் ஊக்கப்படுத்துதலும்.
- விழுமியக் கருத்துக்களை இனங்காண வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- பாண்டிமாதேவி கனவிலே கண்ட துர்நிமித்தங்கள் முதலாம் காட்சியிலும் அவற்றை அரசனுக்குக் கூறுதல், கண்ணகி வருகை, வழக்குரைத்தல் ஆகியன இரண்டாம் காட்சியிலும் காட்டப்பட்டுள்ளன.

  1. எந்த இடத்திலும் நீதிக்காகப் போராடுதல்
  2. அரசனாக இருந்தும் பாண்டிய மன்னன் பிழையை ஏற்றுக் கொள்ளுதல்

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடப் பகுதி
- அகராதி
- எழுது தாள், எழுது கருவி

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாண்டிமாதேவி கண்ட கனவு பற்றி விபரிப்பார்.
- கண்ணகி வழக்குரைத்தல் நாடகம் பற்றி எடுத்துக் கூறுவார்.
- நீதிக்கருத்துக்களை எடுத்து விளக்குவார்.
- நாடகத்தைப் பாத்திரமேற்று நடித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி** 10.0 : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 10.2 : கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்**: பந்தி எழுதுதல்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- கூறப்படும் விடயத்தை அவதானமாகக் கேட்டுக் கிரகிப்பார்.
- கிரகித்த விடயத்தின் தலைமைக்கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு எழுதுவார்.
- கிரகித்தவற்றில் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்தும் தேவையற்றவற்றை நீக்கியும் ஒழுங்குபடுத்தி எழுதுவார்.
- ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்துக்களைப் பந்தியாகப் பொருத்தமான குறியீடுகளை இட்டு எழுதுவார்.
- நேர்த்தியாக எழுதும் ஆற்றலைப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாட அறிமுகம் செய்தல்.
- விடயத் தொடர்புள்ள சில வாக்கியங்களை வழங்கி அவற்றைத் தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்தி, அமைக்குமாறு மாணவர்களை வழிப்படுத்தல்.
- பந்திகளை வழங்கி அவற்றில் தலைமைக்கருத்து, துணைக்கருத்துக்களை மாணவர்கள் இனங்கான வழிகாட்டுதல்.
- பந்தி ஒன்று எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- குறிப்பிட்ட விடயம் தொடர்பான கலந்துரையாடல் மூலம் பெறப்பட்டவற்றை, பந்தி வடிவில் எழுத வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- பந்தி என்பது ஒரு விடயத்தினை விளக்கிக் கூறுவதாக இருத்தல் வேண்டும்.
- குறிப்பிட்ட மையக்கருத்து ஒரு பந்தியில் இருத்தல் வேண்டும். பெரும்பாலும் பந்தியின் தலைமை வாக்கியம் அதுவாக இருத்தல் வேண்டும்.
- மையக் கருத்தை வலுப்படுத்துவதாக துணைக்கருத்துக்கள் இருத்தல் வேண்டும்.
- கருத்துத் தொடர்புடையனவாக, ஒழுங்கு முறையில் வாக்கியங்கள் அமையும்போது பந்தி சிறப்பானதாக அமையும்.
- எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ற மொழிநடையில் விடயங்கள் கருத்துத் தெளிவுடன் கூறப்படுதல் அவசியம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிப் பந்திகள்
- வாக்கியங்கள் அடங்கிய சொல்லட்டைகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஒரு விடயம் தொடர்பாகக் கொடுக்கப்பட்ட தரவுகளை வைத்து, பந்தியாக எழுதுவது பற்றிக் கலந்துரையாடுவார்.
- பந்தி ஒன்று எவ்விதம் அமையும் என்பதனை விளக்குவார்.
- குறிப்பிட்ட விடயம் தொடர்பான தரவுகளைப் பயன்படுத்தி, பந்தி எழுதுவார்.

**தேர்ச்சி** 11.0 : படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 11.1 : ஆக்கத்திறனை வெளிப்படுத்தி, பல்வேறு ஆக்கங்களை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்**: செய்தித்தாள் (கட்டுரைகள்)

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- கட்டுரையை வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.
- கட்டுரையின் பிரதான கருத்தை இனங்கண்டு எழுதுவார்.
- கட்டுரையின் துணைக்கருத்துக்களைச் சுருக்கியும் விரித்தும் கூறுவார்.
- கட்டுரை தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி, சுருக்கி எழுதுவார்.
- கட்டுரை பற்றிய விமர்சனத்தை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் முன்வைப்பார்.
- கட்டுரையின் அவதானிப்புக்கள், அபிப்பிராயங்கள் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கட்டுரையை ஒவ்வொரு மாணவனையும் வாசிக்கச் செய்தல்.
- கட்டுரையை வாசித்து, குறிப்பெழுதச் செய்தல்.
- பிரதான கருத்தையும் துணைக்கருத்துக்களையும் இனங்கண்டு எழுத வழிகாட்டல்.
- கட்டுரையைச் சுருக்கி எழுதச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, பொருத்தமான வினாக்களை வழங்கி குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்.
- குழுக்கள் தமது விமர்சனங்களை முன்வைக்க வழிகாட்டுதல்.
- கட்டுரை தொடர்பான அபிப்பிராயங்கள், கருத்துக்களை அவதானித்து ஆக்கங்களை எழுத வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- கட்டுரையின் நோக்கம் பற்றிய விபரம்.
- பத்திரிகைகள் அவற்றின் தற்காலப் பயன்பாடுகள் பற்றிய விளக்கம்.
- அறிவியலின் வளர்ச்சியினால் இன்றைய உலகம் சுருங்கியிருக்கிறது.
- உலகத்தின் எந்தப் பகுதியிலும் இடம் பெறுகின்ற நிகழ்ச்சியையும் உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வசதி உண்டு.
- வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் மூலம் செய்திகள் விரைந்து பரவுகின்றன.

- **காரணப் பெயர்**

NEWS - செய்திகள்

| | | | | |
|---|---|---|---|---|
| N | - | North | - | வடக்கு |
| E | - | East | - | கிழக்கு |
| W | - | West | - | மேற்கு |
| S | - | South | - | தெற்கு |

- **பத்திரிகையின் தோற்றம், வளர்ச்சி**
  - கி.பி. 1633 இல் இங்கிலாந்தில் தோற்றம்
  - கி.பி. 1835 இல் இந்தியாவில் தோற்றம்
  - ஆரம்பத்தில் செய்திகள் மட்டும்
  - கால ஓட்டத்தில் அறிவியல், இலக்கியம், அருங்கலைகள், ஆன்மிகம், விளையாட்டு, வேடிக்கை, பொழுதுபோக்கு என்று பல துறைகள் தொடர்பான செய்திகள்
  - நாடகம், சினிமா, கேளிக்கை
  - வீரம், விளையாட்டு, வெற்றி சாதனை
  - இன்று செய்தித்தாள்கள் மக்களின் முக்கிய தேவைகளில் ஒன்று
- **செய்தித்தாள்களின் பண்புகள்**
  - செய்திகளை விரைவாக அறிந்து கொள்ள உதவுகிறது.
  - சினிமா, நாடகம், இசைக் கலைகளின் வளர்ச்சிக்கு பங்காற்றுகிறது.
  - கலைஞர்களுக்கு உதவுகிறது.
  - புதிய ஆராய்ச்சிக்கு உதவுகிறது.
  - பன்னாட்டு அரசியல் பற்றிய அறிவைத் தருகிறது.
  - பஞ்சம், வெள்ளம், விபத்து, போர் போன்ற விபரங்களைத் தருகிறது.
  - வாசகர் குரல், மக்கள் குரல், ஆசிரியருக்குக் கடிதம் போன்றவை வாயிலாக மக்கள் அடையும் நன்மைகள் அநேகம் உண்டு.
- **முடிவுரை**
  - மக்களுக்கு பல்துறை அறிவை கொடுத்தல்.
  - பொதுமக்களுக்கும் அரசுக்கும் நல்லுறவுப் பாலமாதல்.
  - காலத்தின் கண்ணாடி.
  - செய்திகளைப் படித்துச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து, வாழ்வில் செம்மை நிலை அடைவோம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பத்திரிகைகள்
- மேற்றலை எறியி (OHP)
- எழுதுகருவிகள்
- எழுதுதாள்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கட்டுரையை வாசித்து, கிரகித்துத் துலங்குவார்.
- கட்டுரையைச் சுருக்கி எழுதுவார்.
- கட்டுரையின் பிரதான கருத்து, துணைக்கருத்துக்களை எழுதுவார்.
- கட்டுரையை விமர்சனம் செய்வார்.
- கட்டுரை ஒன்றைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 12.1 : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கலைச்சொற்கள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- கலைச்சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- கலைச்சொற்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.
- இனங்கண்ட கலைச்சொற்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களைக் குறிப்பிடுவார்.
- கலைச்சொற்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் தெரிவு செய்தல்.
- கலைச்சொற்கள் அடங்கிய பந்தி ஒன்றினை மாணவருக்குக் காட்சிப்படுத்தி, அதில் காணப்படும் ஆங்கிலச் சொற்களை இனங்காணச் செய்தல்.
- இனங்கண்ட சொற்களைத் தனியாக வெள்ளைப் பலகை (White borad) அல்லது கரும்பலகையில் எழுதுதல்.
- எழுதப்பட்ட சொற்கள் குறிக்கும் தமிழ்ச் சொற்கள் பற்றி, கலந்துரையாடுதல்.
- மாணவர் கற்கும் ஏனைய பாடங்களில் காணப்படும் கலைச்சொற்களை அட்டவணைப்படுத்தக் கூறுதல்.
- கலைச் சொல்லாக்கத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- அறிவுத்துறைகள் சார்ந்த விசேட சொற்கள் கலைச்சொற்களாகும்.
- அறிவுத்துறை, தொழினுட்பம் சார்ந்த விடயங்களைக் கிரகித்துக் கொள்வதற்கு கலைச்சொற்கள் உதவுகின்றன.

| | | |
|---|---|---|
| Fax | - | தொலைநகல் |
| CD (Compact Dise) | - | இறுவட்டு, குறுந்தகடு |
| Keyboard | - | விசைப்பலகை |
| Monitor | - | திரை |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமைன்தாள்கள்
- மேற்றலை எறியி (OHP)
- சொல்லட்டை

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கலைச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- தமிழ்க் கலைச் சொற்களுக்கான ஆங்கிலக் கலைச்சொற்களைக் குறிப்பிடுவார்.
- கலைச் சொற்களைப் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்**: திருக்குறள் (செய்ந்நன்றி அறிதல்)

**பாடவேளை** : 04

**கற்றல் பேறுகள்**:

- திருக்குறளின் அமைப்பு முறையினை விளக்குவார்.
- திருவள்ளுவர் பற்றி அறிந்து கூறுவார்.
- குறள்களைத் திருத்தமாக வாசிப்பார்.
- கடின பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- குறட் பாக்களின் பொருளைக் கூறுவார்.
- செய்ந்நன்றி என்பதனை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- செய்ந்நன்றி அறிதலின் மேன்மையை மறப்பதால் வரும் தீமை பற்றி விளக்குவார்.
- விழுமியக் கருத்துக்களை முன்வைப்பார்.
- ஓசையுடன் ஓதிக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடப்பிரவேசத்தைத் திட்டமிடல்.
- திருவள்ளுவர், திருக்குறள் பற்றி விளக்குதல்.
- செய்ந்நன்றி அறிதல் பற்றி விளக்கமளித்தல்.
- குறள்களைக் காட்சிப்படுத்தி, வாசிக்கச் செய்தல்.
- கடின பதங்களுக்குப் பொருள் விளக்குதல்.
- குறட்பாக்களுக்குப் பொருள் கூறுதல்.
- குறட்பாக்களை இசையுடன் ஓதிக்காட்டச் செய்தல்.
- விழுமியக் கருத்துக்கள் பற்றி விளக்குதல்.
  (OHP, பல்லூடகம் போன்றன உபயோகிக்கலாம்)
- குழுக்களாக்கி பாடவிடல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- திருவள்ளுவர் - தெய்வப் புலவர், பொய்யாமொழியார், செந்நாப்போதகர்
  திருக்குறள் குறள் வெண்பாவினால் ஆனது
  குறள் - குறுகிய பாட்டு
- 'அ' கரத்தில் ஆரம்பிக்கப்பட்டு 'ன்' இல் முடிவடைகிறது.

- 1 - 3 குறள்கள் - செய்ந்நன்றியின் உயர்வு
  1. காரணமின்றிச் செய்தல்
  2. காலத்தினால் செய்தல்
  3. பிரதி பலனை எதிர்பாராது செய்தல்
- 4 - 5 குறள்கள் - சான்றோர்க்குச் செய்யும் நன்றி அவர்களால் பெரிதாக மதிக்கப்படும் (பயனை அறிந்தோர்க்கு செய்யும் உதவி)
- 6 - 7 குறள்கள் - நன்றி செய்தவருடைய நட்பின் உயர்வு
- 8 - 9 குறள்கள் - செய்ந்நன்றியின் அவசியம்
- 10 ஆம் குறள் - செய்ந்நன்றி மறப்பதால் ஏற்படும் தீங்கு

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- திருக்குறள்
- பாடநூல்
- செய்ந்நன்றியுடன் தொடர்புடைய கட்டுரைகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- குறள்களைத் திருத்தமாக வாசிப்பார்.
- கடின பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- குறள்களின் பொருளைக் கூறுவார்.
- குறளை ஓசையுடன் ஓதிக்காட்டுவார்.
- விடயங்களைத் தொகுத்துக் கூறுவார்.

## மூன்றாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாட வேளை | பக். |
|---|---|---|---|---|---|
| 01. | 5.0 | 5.1 | சேர். ஐசாக் நியூற்றன் | 04 | 55 |
| 02. | 12.0 | 12.2 | மரபுத்தொடர்கள் | 02 | 57 |
| 03. | 9.0 | 9.1 | நீதிநெறி விளக்கக் கதைகள்:<br>புகழ்ச்சி இகழ்ச்சி அளித்த கதை | 03 | 59 |
| 04. | 4.0 | 4.1 | முடிவுறாக் கதைகள் அல்லது<br>சம்பவ விபரிப்பு | 02 | 61 |
| 05. | 9.0 | 9.1 | ஈசலும் புற்றும் | 03 | 62 |
| 06. | 11.0 | 11.2 | அழைப்பிதழ் எழுதுதல்<br>விளம்பரம் எழுதுதல் | 03 | 64 |
| 07. | 1.0 | 1.4 | சொற்பொழிவு | 03 | 66 |
| 08. | 4.0 | 4.2 | சிறிய மேடைப்பேச்சு | 02 | 67 |
| 09. | 7.0 | 7.1 | கவிதை: மரங்கள் வாழ்க! மாநிலம் வாழ்க! | 03 | 69 |
| 10. | 6.0 | 6.1 | செய்யுட் பகுதி | 03 | 71 |
| 11. | 9.0 | 9.1 | குறும்பா | 03 | 73 |
| 12. | 1.0 | 1.2 | பாவோதல் : புதிய ஆத்திசூடி | 02 | 75 |
| 13. | 6.0 | 6.2 | உரைநடைப்பகுதி:<br>கம்பரில் பாலர் கல்வி | 03 | 76 |
| 14. | 13.0 | 13.3 | சொற்புணர்ச்சி | 03 | 78 |
| 15. | 8.0 | 8.2 | வாக்கியங்கள் எழுதுதல் | 03 | 80 |

**தேர்ச்சி 5.0** : ஆக்கபூர்வமான செயற்றிறன் உடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.1 : விடயத் தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: சேர் ஐசாக் நியூற்றன்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்** :

- வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.
- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசிப்பார்.
- எழுத்துக்களின் ஒலிபேதங்களை இனங்கண்டு வாசிப்பார்.
- தொனி பேதங்களை அனுசரித்து வாசிப்பார்.
- எழுத்துக்களுக்கும் சொற்களுக்கும் உரிய அழுத்தத்தைக் கொடுத்து வாசிப்பார்.
- பாட உள்ளடக்கத்தை அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப் பிரவேசத்தைத் திட்டமிடல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, மௌனமானவும் உரத்தும் வாசிக்கச் செய்தல்.
- வாசித்த விடயங்கள் பற்றி, மாணவரை எழுமாறாகக் கூறச் செய்தல்.
- விடயம் முழுவதும் விளங்கும் வரை இம்முறையைப் பின்பற்றுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- சேர் ஐசாக் நியூற்றனின் வாழ்க்கைச் சம்பவங்கள், கண்டுபிடிப்பு முயற்சிகள் பற்றிக் கூறப்படுகிறது.
- விஞ்ஞான வளர்ச்சிக்காக அவர் செய்த சேவைகள், அவருக்குக் கிடைத்த பட்டங்கள், அவரது இயல்புகள் பற்றிக் கூறப்படுகிறது.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- எழுதுகருவி

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- உரிய முறைகளில் வாசித்துக் காட்டுவார்.
- பாட உள்ளடக்க விடயங்களை எடுத்துக் கூறுவார்.
- சேர் ஐசாக் நியூற்றன் என்ற விஞ்ஞானி பற்றிய குறிப்புக்களை எழுதி வாசிப்பார்.
- விஞ்ஞானிகளின் வாழ்க்கைச் சம்பவங்களை வாசித்து, விபரித்துக் கூறுவார்.

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்றொடர்களின் இயல்பையும் பொருளையும் வகையையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: மரபுத் தொடர்கள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- கருத்துக்களைக் கேட்டுக் கிரகித்து, அவற்றினை விளக்கும் மரபுத் தொடர்களை இனங்கண்டு கூறுவார்.
- மரபுத்தொடர்கள் கூறும் படிப்பினைகளையும் விழுமியக் கருத்துக்களையும அறிந்து கூறுவார்.
- கருத்துக்களை முன்வைக்கும்போது, மரபுத்தொடர்களைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.
- மரபுத்தொடர்களுக்கான வரைவிலக்கணத்தை முன்வைப்பார்.
- மரபுத்தொடர்களின் வகைப்பாடுகளைப் பட்டியற்படுத்துவார்.
- மரபுத்தொடர்களைப் பொருத்தமுறப் பயன்படுத்தி, வாக்கியங்களை அழகுற எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- ஏற்கெனவே அறிந்து கொண்ட மரபுத்தொடர்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மரபுத்தொடர்களைத் தொகுக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, மரபுத்தொடர்களின் கருத்துக்களை எழுதச் செய்தல்.
- எழுமாறாக அழைத்து, மரபுத்தொடர்களின் கருத்துக்களைச் கூறச் செய்தல்.
- பொருத்தமான மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- மரபுத்தொடர் சமுதாயத்தின் அனுபவத்திரட்டு. இவற்றை எப்போது ஆக்கினார்கள் என்று கூறுதல் கடினம்.
- படிப்பறிவுள்ளவர் மட்டுமன்றி, பாமரர்களும் இவற்றைப் பொருத்தமான இடத்தில் பயன்படுத்துவார்.
- மரபுத்தொடர், நியமத் தமிழில் மட்டுமன்றி பொதுப்பேச்சு வழக்கினை ஒட்டியதாகவும் அமைந்திருக்கின்றது.
- மரபுத்தொடர்கள் பல்வேறு வகையாக வகைப்படுத்தப்படுகின்றன.

  உ - ம் : தலை பற்றியன
  கை பற்றியன

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாட நூல்
- சொல்லட்டைகள்
- செயற்பாட்டுப் படிவங்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- மரபுத்தொடர்கள் பற்றி அறிந்து கூறுவார்.
- மரபுத்தொடர்களைப் பொருத்தமுறப் பயன்படுத்தி, வாக்கியங்களை எழுதுவார்.
- மரபுத்தொடர்களுக்கான கருத்துக்களை விளக்கி எழுதுவார்.
- தமது ஆக்கங்களில் மரபுத்தொடர்களைப் பிரயோகித்துக் கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 9.0** : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 9.1 : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்**: நீதிநெறி விளக்கக் கதைகள்:
புகழ்ச்சி இகழ்ச்சி அளித்த கதை

**பாடவேளை** : 03

**கற்றல் பேறுகள்** :

- நீதிநெறி விளக்கம், நீதிநெறி விளக்கக் கதைகள் ஆகிய நூல்கள் பற்றி அறிந்து கூறுவார்.
- நீதிப்பாடல்களைக் கொண்டு கூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளை அறிந்து விபரிப்பார்.
- கதையை தொனிவேறுபாட்டுடனும் மெய்ப்பாட்டுணர்ச்சியுடனும் வாசிப்பார்.
- கதையிலும் பாடலிலும் கூறப்படும் விழுமியக் கருத்துக்களை தமது வாழ்வில் கடைப்பிடிப்பார்.
- பாடல்களை இசையுடன் பாடி நயப்பார்.
- நீதிக்கருத்துக்கள் வெளிப்பட புதிய ஆக்கங்களைப் படைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- நீதி நெறிவிளக்கம் - நூலாசிரியர் குமரகுருபரர்.
  நீதி நெறிவிளக்கக் கதைகள் - ஆசிரியர் சு.அ. இராமசாமிப் புலவர்.
- நூலாசிரியர்கள் பற்றிய விபரங்களைக் கூறிக் கலந்துரையாடுதல்.
- பாடல்களையும் எடுத்தாளப்பட்டுள்ள கதை பற்றியும் விளக்கமளித்தல்.
- கதையை வாசித்துக் காட்டுதல்.
- தனித்தனியாக, தொனி வேறுபாடுகளுடன் வாசிக்கச் செய்தல்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுதல்.
- பாடல்களின் பொருள் விளக்கம்.
- கதைக்கும் பாடல்களுக்குமான தொடர்பு பற்றிக் கலந்துரையாடுதல்.
- விழுமியக் கருத்துக்கள் பற்றிய விளக்கம்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- குமரகுருபரர், சு.அ. இராமசாமிப் புலவர் பற்றிய விபரங்கள்
- கதைகளின் தலைப்புக்கள்
  - புகழ்ச்சி இகழ்ச்சியை அளித்த கதை
- “தன்னை வியப்பிப்பான்...” எனத் தொடங்கும் பாடல் பற்றிய விளக்கம்
- அரும்பதங்கள் - பொருள் விளக்கம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- நீதிக் கதைகள்
- நீதிப் பாடல்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- நூலாசிரியர் பற்றி அறிந்து கூறுவார்.
- கதையைத் தொனி வேறுபாட்டுடன் வாசிப்பார்.
- பாடல்களை இசையுடன் பாடுவார்.
- பாடல்களின் பொருளை எழுதுவார்.
- பாடல்கள் கூறும் படிப்பினைகளைத் தமது வாழ்விலும் கடைப்பிடிப்பார்.
- பாடல்களை அடிப்படையாகக் கொண்டு, ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி** 4.0 : கேட்போர் உளங்கொளத்தக்க வகையில் தமது எண்ணங்களை எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 4.1 : ஆக்கத்திறன் வெளிப்படுத்தும் விதத்தில் தெளிவாகப் பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : முடிவுறாக் கதைகள் அல்லது சம்பவ விபரிப்பு

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- வழங்கப்படும் விடயத்தை வளர்த்து விரித்துக் கூறுவார்.
- வழங்கப்படும் விடயத்தில் சொல், சொற்றொடர்கள் தொடர்பான விபரிப்புக்களைச் செய்வார்.
- வழங்கப்பட்ட விடயத்தினை ஒன்றுடன் ஒன்று தொடர்புற எடுத்துரைப்பார்.
- தாம் கூறுகின்ற விடயத்திற்குப் பொருத்தமான செம்மையான மொழி நடையைக் கையாள்வார்.
- தாம் பெற்ற அனுபவங்களை மற்றவரும் உணரும் வகையில் விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடத்தைத் திட்டமிடல்.
- முடிவுறாக் கதைகள் சிலவற்றை மாணவர்களைக் கேட்கச் செய்து அவர்களது அனுபவ விபரிப்புக்களைத் தயாரிக்குமாறு கூறுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, அவர்களது அனுபவ விபரிப்புக்களைக் கூறச் செய்தல்.
- அனுபவ விபரிப்புக்களைச் சம்பவங்களாகப் பட்டியற்படுத்திக் கூறுதல்.
- சொற்கள், சொற்றொடர்களின் கருத்து விளக்கங்களைக் கூறச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

பொருத்தமான முடிவுறாக் கதைகள் சிலவற்றைத் தயாரிக்குக அல்லது சில தலைப்புக் - களை வழங்கி, மாணவர்களின் சம்பவ விபரிப்புக்களைக் கேட்டுக் கொள்க.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல், அகராதி
- ஒலிப்பதிவு நாடாக்கள்
- சில முடிவுறாக் கதைகள் அல்லது சம்பவ விபரிப்புத் தலைப்புக்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- தரப்பட்டுள்ள தலைப்பில் சம்பவ விபரிப்புக்களைக் கூறுவார் அல்லது தரப்படும் முடிவுறாக் கதைகளை விபரித்துக் கூறுவார்.
- சம்பவ விபரிப்புக்களைத் தொடர்புபடுத்திக் கூறுவார்.
- சம்பவ விபரிப்புக்களை அல்லது தங்களது அனுபவங்களை விளக்கமாகக் கூறுவார்.
- மொழியைச் செம்மையாகக் கையாளும் திறனைப் பெறுவார்.
- தமது பேச்சாற்றலைப் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி 9.0** : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : ஈசலும் புற்றும்

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள்:

- உரையும் கதையும் என்ற வடிவம் பற்றி அறிந்து கூறுவார்.
- தரப்பட்டுள்ள உரையும் கதையும் எழுதிய ஆசிரியர் பற்றிக் கூறுவார்.
- விடயத்திற்கேற்ற உணர்ச்சியோடும் தொனியோடும் வாசிப்பார்.
- மையக்கருத்தையும் துணைக்கருத்தையும் இனங்கண்டு எழுதுவார்.
- கேட்டுக் கிரகித்த கதை தொடர்பாக, தமது எண்ணங்களை வெளிப்படுத்துவார்.
- உரையும் கதையுமான ஆக்கங்களைப் படைப்பார்.
- இவ் உரைப்பகுதியில் கூறப்பட்ட விழுமியக் கருத்துக்களை எடுத்துரைப்பார்.
- மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கக்கூடாது என்பதை வாழ்வில் கடைப்பிடிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- உரையும் கதையும் வடிவம் பற்றி கலந்துரையாடுதல்.
- உரையும் கதையும் வடிவத்தினை வாசித்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, வாசிக்கச் செய்தல்.
- மையக்கருத்தையும் துணைக்கருத்தையும் இனங்காண வழிப்படுத்துதல்.
- கதை கூறும் படிப்பினைகளை எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

- உரையும் கதையும் வடிவம் பற்றிய விளக்கம்.
- கறையான்களின் வீடு கட்டும் முயற்சி, வீட்டின் அமைப்பு பற்றிய விளக்கம்.
- புற்றாம்பழம் பற்றிய விளக்கம்.
- பாம்பின் வருகை, கறையான்களின் துன்பம்.
- கறையான்களின் எதிர்ப்புணர்வு.
- பாம்பின் மனமாற்றம்.
- ஈசல்கள் உருவாக்கம் அவற்றின் ஆதிக்க உணர்வு.
- கறையான்களினது தொடர்ந்த துன்பம்.
- மழை பெய்தல், விவசாயியின் வருகை, புற்றின் அழிவு.
- குறியீட்டு முறையில் கதை உணர்த்தும் படிப்பினை.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூலில் தரப்பட்டுள்ள உரையும் கதையும்
- டிமைன் தாள்கள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- உரையும் கதையும் வடிவம் பற்றி கூறுவார்.
- மெய்ப்பாட்டுணர்வோடு உரையும் கதையும் பகுதியை வாசிப்பார்.
- மையக்கருத்தை இனங்கண்டு எழுதுவார்.
- துணைக்கருத்தை விபரித்து எழுதுவார்.
- கதையின் மூலம் வெளிப்படும் விழுமியக் கருத்துக்களை அறிந்து எழுதுவார்.
- உரையும் கதையும் வடிவிலமைந்த ஆக்கங்களை வாசிப்பார்.

**தேர்ச்சி 11.0** : படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 11.2 : நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்**: அழைப்பிதழ் எழுதுதல், விளம்பரம் எழுதுதல்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- அழைப்பிதழ் / விளம்பரம் எழுதப்படும் சந்தர்ப்பங்களை அறிந்து கூறுவார்.
- அழைப்பிதழின் / விளம்பரத்தின் தேவை பற்றி அறிந்து கூறுவார்.
- அழைப்பிதழின் / விளம்பரத்தின் அமைப்பினை விளங்கி எழுதுவார்.
- அழைப்பிதழினை / விளம்பரத்தினைச் செம்மையாகவும் அழகாகவும் தயாரிக்கும் திறனைப் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு விதமான அழைப்பிதழ்களை / விளம்பரங்களை வழங்குதல்.
- அழைப்பிதழினை / விளம்பரத்தினை வித்தியாசமாகத் தயாரிக்க வழிப்படுத்துதல்.
- அவை எழுதப்படும் சந்தர்ப்பம், அவற்றின் அமைப்பு என்பன பற்றிய வினாக்களை வழங்கி விடையளிக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- அழைப்பிதழ் / விளம்பரம் எழுதப்படும் பல்வேறு சந்தர்ப்பங்களைக் கூறுதல்.
- அழைப்பிதழ் / விளம்பரங்களின் தேவை பற்றிக் கலந்துரையாடுதல்.
- அழைப்பிதழின் அமைப்புப் பற்றிக் குறிப்பிடல்.

  விடயம் - கொண்டாடுபவரது பெயர்

  - இடம், திகதி, நேரம்

  - அழைப்போர்

கவர்ச்சி - நிறமூட்டல்

- படங்கள்

எழுத்து - சிறிய வசனங்கள்

- வாசிப்போரைக் கவரும் வாக்கியங்கள்
- புதிய சிந்தனைகள், கூற்றுக்கள்
- கவர்ச்சிகரமான விளிப்பு

- விளம்பரங்களின் அமைப்புப் பற்றிக் குறிப்பிடல்.

விடயம் - விளம்பரம் செய்யப்படும் பொருள்

- இடம், திகதி, நேரம்
- அழைப்போர்

கவர்ச்சி - நிறமூட்டல்

- படங்கள்

எழுத்து - சிறிய வசனங்கள்

- வாசிப்போரைக் கவரும் வாக்கியங்கள்
- புதிய சிந்தனைகள், கூற்றுக்கள்
- கவர்ச்சிகரமான விளிப்பு

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- மாதிரி அழைப்பிதழ்கள், விளம்பரங்கள்
- டிமைன் தாள்கள்
- மேற்றலை எறியி (OHP)

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- நாளாந்தத் தேவைகளுக்காக எழுதுவார்.
- அழைப்பிதழ் / விளம்பரங்கள் அனுப்பப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.
- பல்வேறு வகையிலான அழைப்பிதழ்கள் / விளம்பரங்களின் அமைப்பினை அறிந்து கூறுவார்.
- தரப்படும் விடயத்துக்குப் பொருத்தமான அழைப்பிதழை / விளம்பரங்களைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி** 1.0 : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப, வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.4 : செயற்றிறனும் விளைதிறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்**: சொற்பொழிவு

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- சொற்பொழிவின் தலைப்பினைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- சொற்பொழிவு எழுதப்பட்டுள்ள முறையினை விளக்கிக் கூறுவார்.
- சொற்பொழிவின் உள்ளடக்க விடயங்களைப் பட்டியற்படுத்துவார்.
- தாமும் சொற்பொழிவு ஒன்றினை எழுதுவார்.
- தரப்பட்டுள்ள சொற்பொழிவினை நிகழ்த்திக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடப் பிரவேசத்தைத் திட்டமிடல்.
- சொற்பொழிவு ஒன்றினை மாணவரைக் கேட்கவிடல் அல்லது சொற் - பொழிவை ஒலிநாடாவில் பதிந்த பின்னர் மாணவரைக் கேட்கவிடல்.
- மாணவரைக் குழுக்களாக்கி, சொற்பொழிவில் கூறப்பட்ட விடயங்களைப் பட்டியற்படுத்த வழிகாட்டல்.
- மாணவர் பட்டியற்படுத்திய விபரம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- தரப்பட்டுள்ள சொற்பொழிவில் காணப்படும் விழுமியக் கருத்துக்களை இனங்கண்டு, எழுதச் செய்தல்.
- மரபுத்தொடர்களைத் தொகுக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்துவதாயின், கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றிய விளக்கம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்கள்
- இறுவட்டுக்கள்
- அகராதி

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- தரப்படும் தலைப்பில் சொற்பொழிவினை நிகழ்த்திக் காட்டுவார்.
- சொற்பொழிவொன்றினைச் சுயமாக எழுதுவார்.
- சொற்பொழிவில் காணப்படும் கருத்துக்களைப் பட்டியற்படுத்துவார்.

**தேர்ச்சி 4.0** : தமது எண்ணங்களை, கேட்போர் உளங்கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 4.2 : எடுத்துக்கொண்ட விடயத்திற்குப் பொருத்தமாக, பொருட் - செறிவோடு பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : சிறிய மேடைப்பேச்சு

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- சிறிய மேடைப்பேச்சு ஒன்றின் தலைப்பினை, தெரிவு செய்வதற்காகக் கலந்துரையாடுவார்.
- மேடைப்பேச்சு ஒன்று நிகழ்த்தும் முறையினை எடுத்துக் கூறுவார்.
- மேடைப்பேச்சு ஒன்றின் உள்ளடக்க விடயங்களைப் பட்டியற்படுத்துவார்.
- தலைப்புக்கேற்ற விழுமியக் கருத்துக்கள், மேற்கோள்கள் என்பனவற்றை இணைத்துக் கொள்வார்.
- சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்தும் திறனைப் பெறுவார்.
- வழங்கப்படும் தலைப்பில், மேடைப்பேச்சு ஒன்றினை நிகழ்த்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் திட்டமிடுதல்.
- மாணவருக்குப் பொருத்தமான பேச்சு ஒன்றினைச் செவிமடுக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, மேடைப்பேச்சு ஒன்றினை நிகழ்த்தும் முறையினையும் அதில் கூறப்பட்ட விடயங்களையும் பட்டியற்படுத்துமாறு கூறுதல்.
- மாணவர் பட்டியற்படுத்திய விபரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- மேடைப்பேச்சு ஒன்றினை எழுதச் செய்தல்.
- தயாரிக்கப்பட்ட சிறிய மேடைப்பேச்சினை நிகழ்த்தச்செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- ஒரு தலைப்பினை ஒட்டிய பல்வேறு விடயங்களை விளக்கி, தொகுத்துத் தருவதாக பேச்சு அமையும்.
- பேச்சு ஒன்றின் அமைப்பு:
  - பொருத்தமான விளிப்பு
  - தலைப்பை அறிமுகம் செய்தல்
  - தலைப்புக்கேற்ற கருத்துக்களை முன்வைத்தல்
  - தொகுத்துக் கூறலும் முடிவுரையும்

- பேச்சாளர் பேசும்போது கடைப்பிடிக்க வேண்டியவை / கவனிக்க வேண்டியவை:
  - முறையானதும் தெளிவானதுமான உச்சரிப்பு
  - பேச்சுக்குகந்த தொனி
  - அவை அஞ்சாமை
  - அவையீர்ப்பு
  - நிலை

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்கள்
- ஒலிப்பதிவுகள்
- மாதிரி மேடைப்பேச்சுகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- மேடைப் பேச்சு ஒன்றினைக் கேட்டு, கருத்துக்களையும் அமைப்பினையும் கூறுவார்.
- மேடைப் பேச்சு ஒன்று நிகழ்த்துவதற்கான சட்டகம் ஒன்றினை அமைத்துக் கொள்வார்.
- தாம் எடுத்துக் கொண்ட தலைப்பிற்கேற்ப மேடைப் பேச்சு ஒன்றினை நிகழ்த்திக் காட்டுவார்.

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்**: கவிதை: மரங்கள் வாழ்க! மாநிலம் வாழ்க!
(பரலி சு.நெல்லையப்பர்)

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- பாடல்களைச் செம்மையாக வாசிப்பார்.
- பாடல் ஆசிரியர் பற்றி எடுத்துக் கூறுவார்.
- பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்களை விளங்கிக் கூறுவார்.
- பாடல்களை இசையோடு பாடுவார்.
- கூறப்படும் விழுமியக் கருத்துக்களையும் படிப்பினைகளையும் அறிந்து வெளிப்படுத்துவார்.
- மரங்களின் முக்கியத்துவம் பற்றி விளங்கித் துலங்குவார்.
- இயற்கையைப் பேணி, சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப்பிரவேச முறைகளைத் திட்டமிடலும் பிரவேசித்தலும்.
- ஒவ்வொரு பந்தியையும் வாசித்த பின்னர் அது பற்றி விளக்கம் கூறுதல்.
- பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் படிப்பினைகளையும் விழுமியங்களையும் கலந்துரையாடுதல்.
- தாவரங்கள்: மரங்கள், செடி, கொடிகளின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுதல்.
- தலைப்பின் பொருத்தப்பாட்டைக் கூறி விளக்கமளித்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு குழு வாசிக்கவும் பாடவும் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- பாடியவர் பரலி சு. நெல்லையப்பர்

- பரலி சு. நெல்லையப்பர் பாரதியாரின் புகழை உலகறியச் செய்தவர். அவர் பாரதியாரால், தம்பி என அழைக்கப் பெற்றவர்.
- ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பாரதியாரின் பாடல்களைத் துணிவுடன் நூலாக வெளியிட்டுப் பரப்பியவர். வ.உ. சிதம்பரனார் நிறுவிய சுதேசிக் கப்பல் நிறுவனத்தில் பணியாற்றியவர். 1908 இல் சிதம்பரனாருடன் சிறை சென்றவர்.
- புதுச்சேரியில் சூரியோதயம், இந்தியா, விஜயா, கர்மயோகி எனும் இதழ்களில் பாரதியாருடன் சேர்ந்து பணியாற்றியவர்.

- மரஞ் செடி கொடிகளால்தான் மண்ணில் வாழ்வு நிலைக்கிறது.

- மரஞ்செடி கொடிகள் உடுப்பதற்கு உடையும் உண்பதற்கு உணவும், அறுசுவைக் கனிகளும் தந்து நம்மைப் பாதுகாக்கின்றன.

- **அரும்பதங்கள்**

  மண்ணில் - உலகில்
  உணர்வது - தெரிந்து கொள்வது
  அறுசுவை - ஆறு வகையான சுவைகள்
  அவையாவன: கைப்பு (கசப்பு), இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு (காரம் / உறைப்பு)

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல் - கவிதைப் பகுதி
- எழுதுதாள், எழுதுகருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடல்களைச் சந்தி பிரித்து வாசித்துக் காட்டுவார்.
- பாடல்கள் ஒவ்வொன்றும் கூறும் பொருளைக் கூறுவார்.
- பாடல்கள் ஒட்டுமொத்தமாக விளக்கும் கருத்துக்களைக் கூறுவார்.
- இவ்வாறான வேறு பாடல்களைத் தேடி, வாசிப்பார்.
- தாமும் இது போன்ற பாடல்களை எழுதுவார்.

**தேர்ச்சி 6.0** : கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : செய்யுட் பகுதி:
"ஈயாத வற்சரின் வெளவி ..........."

**பாடவேளை** : 03

### கற்றற் பேறுகள்:

- மௌனமாக வாசித்துக் கிரகித்து செய்யுளின் பொருளினைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- செய்யுளின் உள்ளடக்க விடயங்களைப் பட்டியற்படுத்துவார்.
- பிரதான கருத்து, துணைக்கருத்துக்களைக் கூறுவார்.
- அரும்பதங்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- வாசித்த பகுதியைச் சொந்த மொழி நடையில் கூறுவார்.
- கூறப்படும் விழுமியங்களைப் பின்பற்றுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் திட்டமிடல்.
- மாணவர் செய்யுளை மௌனமாக வாசித்துக் கிரகிக்கச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு குழுவினர் வாசிக்கவும் பாடவும் செய்தல்.
- ஒவ்வோர் பாடலையும் மௌனமாக வாசித்த பின்னர், அவற்றில் உள்ள விடயம் தொடர்பாக விளக்கம் கூறச் செய்தல்.
- பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் படிப்பினைகளையும் விழுமியங்களையும் பற்றி கலந்துரையாடி, பட்டியற்படுத்தல்.
- பாடல்களில் கூறப்படும் படிப்பினைகளையும் விழுமியங்களையும் பட்டியற்படுத்தச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

### முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

**பாடல்களின் பொருள்**

1. பிறருக்குக் கொடுக்காத உலோபிகளிடமிருந்து பொருளைக் கவர்ந்து, இரந்து கேட்கின்ற மிகவும் வறுமையாளருக்குக் கொடுக்கின்ற கொடை வள்ளல்கள் போல, ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும் உப்புத்தன்மையான கடலிலிருந்து நீரை அதிகம் பெற்று, ஒன்று சேர்ந்து திரண்டு மேகம் மேலெழும்.
2. கல்வியறிவு இல்லாதவர்களுடைய உள்ளம் போலவும் அல்லது கடுகண்ணாவைக் குகையில் செறிந்து உள்ள இருள் போலவும் பொறாமை உள்ளவர் மனம் போலவும் இருளுடையதாகி, மேகம் கருக்கொண்டது.

3. செம்மையான கதிர்களை உடைய சூரியனை இகழ்ந்து சிரிப்பது போல இடையிடையே மின்னி, அவனைப் போருக்கு அழைத்து எதிர்த்து நின்று ஆரவாரித்தல் போல இடியோசைகளை உண்டாக்கும்.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| வற்சர் | - | உலோபி |
| இரவலர் | - | இரப்போர் |
| புரவலா் | - | ஆதரித்துக் காப்பவர், அரசர் |
| வௌவி | - | கவர்ந்து |
| ஆர்ப்பது | - | ஆரவாரிப்பது |
| கனையிருள் | - | மிகுந்த இருள் |
| அழுக்காறு | - | பொறாமை |
| சூல் | - | கர்ப்பம் |
| செங்கதிரோன் | - | சூரியன் |
| அறைகூவி | - | போருக்கு அழைத்து |
| ஆர்ப்பது | - | ஆரவாரிப்பது |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடற்பகுதி "ஈயாத வற்சரின் வௌவி... "
- எழுது தாள், எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:

- பாடல்களைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- பாடல் ஒவ்வொன்றினதும் பொருளைக் கூறுவார்.
- பாடல்கள் மொத்தமாக விளக்கும் கருத்துக்களைக் கூறுவார்.
- இது போன்ற பாடல்களைச் சுயமாக ஆக்குவார்.

**பின்னிணைப்பு**

1. ஈயாத வற்சரின் வௌவி - நல்ல
இரவலர்க் கீகின்ற புரவலர் போல
ஓயா வுவர்க்கட லள்ளி - மிக
வுண்டு திரண்டு புரண்டெழு மேகம்.

2. கல்லாதவர் மனம் போல - அன்றிக்
கடுகணைக் குகைவரு கனையிருள் போல
அல்லா தழுக்காறு கொண்டோர் - மனம்
ஆமென வேயிருண்டங்கு சூல் கொண்டே.

3. செங்கதி ரோன்தனை யெள்ளி - நின்று
சிரிப்பது போல இடையிடை மின்னி
அங்கவ னோடறை கூவி - எதிர்த்
தார்ப்பது போல இடித்துமு ழங்கும்.

**(நவாலியூர் சோமசுந்தரப் புலவர்)**

**தேர்ச்சி 9.0** : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 9.1 : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி, எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : குறும்பா

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள் :**

- பாடல்களைப் பதம் பிரித்து, கொண்டு கூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைக் கூறுவார்.
- பாடல்களில் வரும் கடின பதங்களுக்குப் பொருள் எழுதுவார்.
- பாடல்களில் காணப்படும் அணிகளை விளக்கி எழுதுவார்.
- பாடல்களை இசையுடன் பாடுவார்.
- பாடல்களைப் பாடிய ஆசிரியர்களைப் பற்றிய தகவல்களைத் தொகுத்து வழங்குவார்.
- பாடல்கள் கூறும் நீதிக் கருத்துக்களை ஏற்று நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாட அறிமுகமொன்றை மேற்கொள்ளல்.
- பாடல்களைப் பதம் பிரித்து, வாசித்துக் காட்டி மாணவரை வாசிக்கச் செய்தல்.
- பாடல்களில் உள்ள அரும்பதங்களுக்குப் பொருள் எழுதச் செய்தல்.
- பொருள் எழுதிய பின்னர், அது தொடர்பாகக் கலந்துரையாடிச் செம்மைப்படுத்தல்.
- பாடல்களிலுள்ள அணிகளை விளக்குதல்.
- பாடல்களை இசையோடு பாடச்செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- அரும்பதங்களுக்கான பொருள் விளக்கம்
- பாடல்களுக்கான பொருள்
- குறும்பாக்களை எழுதியவர்கள் தொடர்பான விளக்கம்

**1. மஹாகவி**

நூறு குறும்பாக்கள் கொண்ட கவிதைத் தொகுப்பினைத் தந்து, தமிழ்க் கவிதை வரலாற்றில் புதுமை செய்தவர். அவரது கவிதைகளில் நகைச்சுவையும் ஆழ்ந்த சிந்தனைக் கருத்துக்களும் நிரம்பியுள்ளன.

2. **குறிஞ்சித் தென்னவன்**
இவரது பாடல்களில் மலையக மக்களின் ஏழ்மையும் அவர்கள் ஏமாற்றப்படும் விதமும் கூறப்பட்டுள்ளன.

3. **பா.சிவபாலன்**
இவர் இலங்கைத் தமிழ் மக்களின் துன்பவியல் வாழ்க்கையைப் பாடியவர்.

**பாடல்: பெருமை**
ஒருவரின் ஆறு பிள்ளைகளும் வெளிநாட்டில் தொழில் செய்கின்றனர். ஆனால், அவரோ அனாதையாக இறந்து, ஊரவர்களால் ஈமக்கிரியை செய்யப்படும் நிலை. அர்த்தமற்ற பெருமையை எள்ளி நகைக்கிறது பாடல்.

**பாடல் : அலுவலகம்**
இப் பாடல் அரசாங்க அலுவலகங்களில் நடைபெறும் பணிகளை எள்ளி நகைக்கிறது.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| விசா | - | வெளிநாடு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் |
| கோடு (Court) | - | நீதிமன்றம் |
| கம்பி எண்ணுதல் (மரபுத்தொடர்) | - | சிறையில் இருத்தல் |
| லயம் | - | மலையக மக்கள் வாழும் இல்லம் |
| காலமாகிவிட்டார் | - | இறந்துவிட்டார் |
| கைதடியார் | - | கைதடி எனுமிடத்திலுள்ள வயோதிப இல்லத்தார் |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல் - கவிதைகள்
- அகராதி
- டிமைன் தாள்கள, எழுது கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடல்களைச் சந்தி பிரித்து, கொண்டு கூட்டி வாசிப்பார்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- பாடல்களின் பொருளைக் கூறுவார்.
- பாடல்களிலுள்ள அணிகளை விளக்குவார்.
- பாடல்கள் கூறும் நீதிக் கருத்துக்களைப் பட்டியற்படுத்துவார்.

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.2 : பாடலை / செய்யுளைப் பொருள் உணர்ந்து சொல்லுவார் / ஓதுவார்.

**விடய உள்ளடக்கம்** : பாவோதல் : **"புதிய ஆத்திசூடி"**
(இரண்டாந் தவணையில் கற்பித்த தேர்ச்சி மட்டம் 7.1 இல் உள்ள பாட விடயம்)

**பாடவேளை** : 02

### கற்றற் பேறுகள்:

- பாடலாசிரியர் பற்றி அறிந்து கூறுவார்.
- பாடல்களைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- பாடல்களில் கூறப்படும் கருத்துக்களை விளங்கிக் கூறுவார்.
- பாடல்களைப் பொருள் உணர்ந்து ஓதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பொருத்தமான பாடப்பிரவேச முறைகளைத் திட்டமிடல்.
- பாரதியாரைப் பற்றியும் அவரது இலக்கிய ஆளுமை பற்றியும் மாணவருக்குக் கூறுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, பாடலைச் சந்தி பிரித்து வாசிக்குமாறு கூறுதல்.
- பாடலைப் பொருள் உணர்ந்து சொல்ல அல்லது ஓத வழிகாட்டல்.
- பாடல்களின் பொருள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

### முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

- மகாகவி பாரதியார் இயற்றியதே புதிய ஆத்திசூடியாகும்.
- பாரதியார் புதிய ஆத்திசூடியில் நவீன கருத்துக்களை கொண்டு, விழுமியங்களையும் படிப்பினைகளையும் வலியுறுத்தியுள்ளார்.
- பாரதியார் இப்பாடல்களில் மனிதகுலம் உய்யும்வண்ணம் பல புதிய கருத்துக்களைக் கூறியுள்ளார்.

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- அகராதி
- பயிற்சிகள்

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடல்களைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- பாடல்கள் ஒவ்வொன்றும் கூறும் பொருளைக் கூறுவார்.
- புதிய ஆத்திசூடியில் உள்ள நவீன கருத்துக்களைக் கூறுவார்.
- இவ்வாறான வேறு பாடல்களைத் தேடியறிவார்.
- தாமும் இவ்வாறான பாடல்களை எழுதுவார்.

**தேர்ச்சி 6.0** : கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: உரைநடைப் பகுதி: கம்பரில் பாலர் கல்வி

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- இதிகாசங்கள் பற்றி அறிந்து கூறுவார்.
- நிறுத்தக் குறிகளை அனுசரித்து தொனிவேறுபாடு, ஏற்ற வேகம், உரிய மெய்ப்பாடுகளுடன் வாசிப்பார்.
- இராமாயணக் கதாபாத்திரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- கட்டுரையில் வெளிப்படுத்தப்படும் செய்திகளைப் பட்டியற்படுத்துவார்.
- கல்வியால் மனிதன் சீர்படுத்தப்படுகின்றமை பற்றிக் கலந்துரையாடுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பொருத்தமான பாடப்பிரவேச நுட்பங்களைக் கைக்கொள்ளுதல்.
- இதிகாசம், இராமாயணம் ஆகியன பற்றி விளக்கமளித்தல்.
- இராமாயண கதாபாத்திரங்களின் உருவப் படங்களைக் காண்பித்தல், பெயர்களைப் பட்டியற்படுத்தல்.
- சம்பவங்களுக்கான சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுதல்.
- பாடப்பகுதியில் கூறப்படும் கருத்துக்களைப் பட்டியற்படுத்திக் காட்டுதல்.
- பாடப்பகுதியில் வரும் காட்சிகளை இறுவட்டில் பதிவுசெய்து, மாணவர்க்குக் காண்பித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

## முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:

- இது இலக்கிய வழி எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட கட்டுரைப் பகுதியாகும்.
- **அரும்பதங்கள்**

  பச்சை - இளம் / இளமை
  ஈரம் - அன்பு
  வசிட்டர் - குரு (இராமன் முதலானோரின் குல குரு)
  ஷேமம் - சுகம் / நலம்
  சௌக்கியம் - சுகம் / நலம்
  கற்ப காலம் - உலக முடிவு காலம்

- இராமனது பிற்கால வாழ்விலே வெளிப்பட்ட நற்பண்புகளுக்கெல்லாம் இராமனுக்கு வசிட்டர் ஊட்டிய கல்வியே காரணமெனக் கூறப்படுகின்றது.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- இராமாயணக்காட்சிப் படங்கள் / வீடியோ
- பாடநூல்
- மேற்றலை எறியி (OHP)
- அகராதி

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- இதிகாசம், இராமாயணம் என்பனவற்றின் தொடர்பினை விளக்கிக் கூறுவார்.
- இராமாயணக் கதாபாத்திரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- கவிச்சக்கரவர்த்தி கம்பர் பற்றி அறிந்து கூறுவார்.
- கட்டுரை வெளிப்படுத்தும் செய்தியினை எடுத்துக் கூறுவார்.
- கட்டுரையில் வெளிப்படுத்தப்படும் செய்திகளைப் பட்டியற்படுத்துவார்.

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.3 : சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்**: சொற்புணர்ச்சி

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- சொற்கள் பல்வேறு விதங்களில் புணரும் விதத்தினை அறிந்து கூறுவார்.
- சொற்புணர்ச்சியை வகைப்படுத்தி விபரிப்பார்.
- இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என்பவற்றை வேறுபடுத்தி, அவற்றுக்கு உதாரணம் கூறுவார்.
- விகாரப் புணர்ச்சியின் வகைகளை இனங்கண்டு கூறுவார்.
- சொற்களைப் பொருத்தமான விதத்தில் பிரித்தும் சேர்த்தும் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சொற்கள் சிலவற்றைக் காட்சிப்படுத்தல்.
- மாணவர்களுக்குச் சொல்லட்டைகளை வழங்கி, சொற்புணர்ச்சியின் வகைப்படுத்தலை இனங்காணச் செய்தல்.
- சொற்றொடர்களை, பொருள் சிதைவுறாமல் எவ்வாறு பிரிக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்தல்.
- சொற்புணர்ச்சியின் வகைகளை உதாரணங்களுடன் விளக்கல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) / எண்ணக்கருக்கள்:**

- **சொற்களைச் சேர்த்து எழுதுதல்**

  மயில் + இறகு = மயிலிறகு

  கிளி + பிள்ளை = கிளிப்பிள்ளை

  கடல் + கரை = கடற்கரை

**விகாரப்புணர்ச்சி**

| **தோன்றல்** | **திரிதல்** | **கெடுதல்** |
|---|---|---|
| காலை + கூட்டம் | உள் + புறம் | நீலம் + வானம் |
| காலைக்கூட்டம் | உட்புறம் | நீலவானம் |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- சொல்லட்டைகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- சொற்களைப் பொருத்தமான வகையில் சேர்த்து எழுதுவார்.
- இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுவார்.
- விகாரப்புணர்ச்சியின் வகைகளை இனங்கண்டு எழுதுவார்.
- சொற்களைப் பொருத்தமான வகையில் பிரித்தும் சேர்த்தும் எழுதுவார்.

**தேர்ச்சி** 8.0 : அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 8.2 : அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கியங்கள் எழுதுதல்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- வழங்கப்படுகின்ற சொற்களின் அல்லது சொற்றொடர்களின் அமைப்புப் பற்றிக் கூறுவார்.
- சொற்களைக் கொண்டு, வாக்கியங்களைத் தர்க்கரீதியாகக் கூறுவார்.
- எழுத்துப் பிழையின்றி, வாக்கியங்களை எழுதுவார்.
- வாக்கியங்களில் காணப்படும் வழுக்களைத் திருத்தி எழுதுவார்.
- இலக்கண வழுவற்ற வாக்கியங்களை, உரிய நிறுத்தக் குறிகளுடன் தமது ஆக்கங்களில் தெளிவாகப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் திட்டமிடல்.
- ஆசிரியர் சில சொற்களைக் கூற, மாணவர் ஒவ்வொருவரும் அச்சொற்களை வைத்து, வாக்கியங்களை அமைத்துக் கூறல்.
- மாணவர் கூறிய வாக்கியங்களில் வழுக்கள் இருப்பின், ஆசிரியர் அவை பற்றிய விளக்கத்தைக் கொடுத்து திருத்தமுறக் கூறுவதற்கு வழிகாட்டுதல்.
- வழுவுள்ள வாக்கியங்கள் சிலவற்றை வழங்கி, மாணவர்கள் அவற்றைத் திருத்தி சரியாக எழுத வழிகாட்டல்.
- அவ்வாக்கியங்களை நிறுத்தற் குறியீடுகள் இட்டு, மேலும் செவ்வையாக எழுத வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீட்டினைத் திட்டமிடுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

**சொற்கள்** : ஒன்றின் குறியீடாக, பெயராக, வினையாக, உரியாக, இடையாக அமைவது.

**சொற்றொடர்** : கருத்து முற்றுப்பெறாமல் நிற்கும் சொற்கூட்டம்.

**வாக்கியங்கள்** : கருத்து முற்றுப்பெற நிற்கும் சொற்கூட்டம்.

**மரபுச் சொற்கள்** : இந்தப் பொருளை இச்சொல்லால் அழைப்பது என்ற வரன்முறைக்குள் வருவன.

**மரபுத்தொடர்** : நேர்ப்பொருளை உணர்த்தாமல் குறிப்புப் பொருளை உணர்த்தும் தொடர்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- எழுது கருவி, எழுதுதாள்
- அகராதிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- வாக்கியங்களில் அமையும் சொற்களையும் அவற்றின் வகைகளையும் இனங்கண்டு கூறுவார்.
- வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் என்பனவற்றை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- சொற்களின் பொருளை அறிந்து, தமது ஆக்கங்களை முன்வைப்பார்.
- ஆக்கங்களை இலக்கண வழுவின்றி, நிறுத்தக் குறிகளுடன் எழுதுவார்.